மலர்-1 இதழ்-19 ஜூன் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

**உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்**



**அறிவியலை பின்னுக்கு தள்ளிய உபநிடதங்கள்**

**எந்த விதத்தில் முடியுமோ அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது**

**தேடி அலையும் ஆத்ம ஞானம்... கிடைக்க உதவும்**

# பாலா

# 72,000 நாடிகளுக்கு வேலை கொடுக்கும்

# குசா தோப்புக் கரணம்



கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி நின்று கொள்ளவும். வலது காலை இடது காலுக்கு முன்னோ அல்லது இடது காலை வலது காலுக்கு முன்னோ வைத்துக் கொள்ளலாம். இரண்டு கைகளால் இரண்டு காதுகளைப் பிடித்துக் கொள்ளவும்.

இந்நிலையில் மெதுவாக நன்றாக அமர்ந்து, எழுந்து தோப்புக் கரணம் இடவும். கால்கள் முழுவதுமாக மடங்கும் அளவிற்கு அமர வேண்டியது முக்கியம்.

குறைந்தது மூன்று தோப்புக் கரணம் இடவும். முடிந்தால் 12, 24, 36 என 108 தோப்புக் கரணங்களோ அதற்கு மேலும் இடலாம்.

உடல், மனம், உள்ளத்தை அற்புத நிலையில் வைத்திருக்க உதவும் ஓர் ஒப்பற்ற வழிபாட்டு முறை. ஒவ்வொரு தோப்புக் கரணத்திற்கும் ஒரு இறை நாமத்தையோ, 108 அஷ்டோத்திர சத நாமாவளிகளில் ஒன்றையோ அல்லது தங்கள் பெயரையோ கூறவும். இது மிக முக்கியமான விதி முறையாகும். இறை நாமத்துடன் கூடி வராத எந்த ஆசனமும் வழிபாடாக அமையாது.

வெறும் உடல் பயிற்சியில் கிட்டும் ஆரோக்யம் ஆடு, மாடுகளைப் போல் நம்மை நீண்ட நாள் உயிருடன் வைத்திருக்கும். அவ்வளவே. உடம்பை இறை நினைவுடன் வளர்த்தலே உண்மையான யோகாசனப் பயிற்சி ஆகும். உடலுடன் உயிரையும் வளர்ப்பதே இறைவனின் திருநாமம். இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். தோப்புக் கரணம் இட்ட பின் மூச்சுக் காற்று சகஜ நிலை அடையும் வரை சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவும்.

சாதாரணமாக, கால்கள் இரண்டையும் ஒன்றொக்கொன்று இணையாக வைத்தே தோப்புக் கரணம் இடுவார்கள். ஆனால், இங்கு குறிப்பிட்டதுபோல் ஒரு காலுக்கு முன் அடுத்த காலை வைத்து தோப்புக் கரணம் இடுதல் குசா முறையில் அமைந்த தோப்புக் கரணம் ஆகும். சாதாரண தோப்புக் கரணத்தைப் போல் குறைந்தது 100 மடங்கு பலன் தரக் கூடியதே சித்தர்கள் அருளிய இந்தக் குசா தோப்புக் கரணம் ஆகும்.

வலது காலை முன் வைத்தோ அல்லது இடது காலை முன் வைத்தோ இந்தப் தோப்புக் கரணத்தைப் போடலாம். பெண்கள் ஆண்கள் இருபாலரும் இந்தத் தோப்புக் கரணத்தால் அற்புத பலன் பெறலாம்.

கர்ப்பமுற்று இருக்கும் பெண்களுக்கு இந்தத் தோப்புக் கரணம் ஒரு வரப் பிரசாதமாகும். பிரசவம் சிரமமின்றி ஆவதுடன் பிறக்கும் குழந்தகளுடம் பூரண உடல் ஆரோக்கியத்தையும் சிறந்த மன வளத்தையும் பெற்றிருக்கும் என்பது உறுதி.

அவ்வாறு பிரவத்திற்கு முன் இந்தத் தோப்புக் கரணம் போடாதவர்களும் பிரசவத்திற்குப் பின் இந்தத் தோப்புக் கரணத்தை போட்டு வந்தால் வயிறு, முதுகு தசைகள் இறுகி அறுவை சிகிச்சையின் போது அளித்த மயக்க மருந்துகளால் ஏற்பட்ட வேதனைகள் குறையும்.





# பிரச்சனை தீர்க்கும்

# வெற்றிலை வழிபாடு

**மேஷம்:** வெற்றிலையில் மாம்பழம் வைத்து செவ்வாய் கிழமை முருகனை வழிபட்டு சாப்பிட துனபங்கள் அகலும்.

**ரிஷபம்:** வெற்றிலையில் மிளகு வைத்து செவ்வாய் கிழமை ராகுவை வழிப்பட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**மிதுனம்:** வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து புதன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**கடகம்:** வெற்றிலையில் மாதுளம்பழம் வைத்து வெள்ளிக் கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**சிம்மம்:** வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**கன்னி:** வெற்றிலையில் மிளகு வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**துலாம்:** வெற்றிலையில் கிராம்பு வைத்து வெள்ளிக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**விருச்சிகம்:** வெற்றிலையில் பேரிச்சம்பழம் வைத்து செவ்வாய் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துயரம் தீரும்.

**தனுசு:** வெற்றிலையில் கற்கண்டு வைத்து வியாழன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மகரம்:** வெற்றிலையில் அச்சு வெல்லம் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**கும்பம்:** வெற்றிலையில் நெய் வைத்து சனிகிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மீனம்:** வெற்றிலையில் சர்க்கரை வைத்து ஞாயிற்றுக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் நோய் தீரும்.



# மனிதனை தெய்வமாக்கும் சக்திவாய்ந்த 7 சக்கரங்கள்

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு அற்புதமான பிறவியாக விளங்க வேண்டும் என்றே படைக் கப்பட்டவர்கள். மற்ற உயிரினங்களைக் காட்டிலும், மனித சக்தி, தெய்வ சக்திக்கு இணையாகவே படைக்கப்பட்ட படைப்பு என்றே கூறலாம்.

ஆனால் அந்த படைப்பின்சக்திகளை ஒருசில வகையில் பாதுகாப்பாக மனிதனுக்குள்ளேயே வைக்கப்பட்டுள் ளது என்பதுதான் உண்மை.

அந்த சக்திகளை வெளிக்கொனர்ந் தால் மனித சக்தியின் ஆற்றல் வெளிப் படும். அவ்வாறு மனித சக்திகளின் ரகசியங்களை வெளிக்கெணர பல்வேறு வழிமுறைகளும் உருவாக்கப் பட்டுள்ளது. யோகம், தியானம், போன்ற பல விஷயங்களின் மூலம் மனித சக்தியின் மகத்துவத்தை வெளிக் கொணர முடியும். ஆனால் பல்வேறு காரண காரியங்களால் மனித சக்தியை வெளிக் கொணர மனிதனே முட்டுக்கட்டையாக உள்ளான் என்பது முற்றிலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

தியானம், யோகா போன்றவற்றை மேற்கொள்ள எப்போது மனிதன் விழைகிறானோ அப்போது மேற்குறிப்பிட்ட மனித சக்தி மெதுவாக வெளியே வரும்.

மகாவிஷ்ணுவிடம் உள்ள சக்கரத்தைப் போன்று அதித சக்தி வாய்ந்த 7 சக்கரங்கள் மனிதனுக்குள் அடங்கி இருக்கிறது. அந்த சக்கரங்களை மனிதன் வெளிக் கொணர்ந்தாலே இவ்வுலக வாழ்க்கையின் கடவுளுடன் ஒன்றனக் கலந்து வாழ முடியும். அந்த சக்கரத்தின் பயன்களும், அந்த சக்கரம் அமைந்த இடத்தையும் பார்ப்போம்.



## 1. மூலாதாரம்:

முதுகெலும்பின் அடிப்பாகத்தில் ஆசன வாயின் அருகே அமைந்துள்ள இந்த சக்கரம் தான் உடல் சக்தியின் இருப்பிடம். அமைப்பில் நான்கு இதழ் தாமரை போல் சிவப்பு நிறத்தில் உள்ளது. உயிர்வாழ வேண்டும் என்கிற ஆசையும், பிடிவாதமும் இங்கேதான் உற்பத்தி ஆகிறது. உடலில் உயிர் இயக்கத்துக்கு இது மூல காரணமாக விளங்குவதால் மூலாதாரம் என்கிற பெயரைப் பெறுகிறது. சிறுநீரகங்களுக்கு மேலுள்ள அட்ரீனல் சுரப்பிகள் இதன் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கின்றன. சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை, முள்ளந்தண்டு ஆகிய வற்றையும் மூலாதாரச் சக்கரம் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

## 2. சுவாதிஷ்டானம்:

இது பாலியல் உணர்வுகளை தூண்டும் சக்கரம். தொப்புளுக்கு சற்று கீழே ஆறு இதழ் தாமரை போல் ஆரஞ்சு நிறத்தில் அமைந்துள்ளது. பாலியல் சக்தி இதில்தான் மையம் கொண்டிருக்கிறது. ஈகோவிற்கும் இந்த சக்திதான் காரணமாக இருக்கிறது. மற்றவர்களின் உணர்ச்சிப் போக்குகளை உணர்கின்ற சக்தியும் இந்த சக்கரத்துக்கு உண்டு. ஐம்புலன்களை அடக்கி அறிகின்ற சக்தியும் இதிலிருந்து தொடர்கிறது. பாலியல் சுரப்பிகளின் மீது இது ஆதிக்கம் செலுத்துகிறது. உற்பத்தி உறுப்புகள், கால்கள் இதன் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

## 3. மணிபூரகம்:

நாபி என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. தொப்பு ளுக்கு சற்று மேலே பத்து இதழ் தாமரை அமைப்பில் மஞ்சள் நிறத்தில் அமைந்துள்ளது. உடலின் மையமாக இதனை கருதலாம். இந்த பகுதியில் இருந்துதான் உடல் இயக்கச் சக்தி உடலெங்கும் விநி யோகிக்கப்படுகிறது. கட்டுக்கடங்காத உணர்ச்சியும் இங்குதான் கருக்கொள்கிறது. அதனால்தான் அதிர்ச்சியோ பய உணர்ச்சியோ ஏற்படுகின்ற போது இந்த பகுதியில் உள்ள தசைகள் இருக்கமடைந்து விடுகின்றன. கணையம், என்கிற சுரப்பி இதனுடைய கட்டுப்பாட் டில்தான் செயல்படுகிறது. மண்ணீரல், இரைப்பை ,கல்லீரல், பித்தப்பை, ஆகியவை இதன் கட்டுப்பாட்டில்தான் செயல்படுகின்றன.

## 4. அனாகதம்:

இதற்கு இருதயச் சக்கரம் என்ற என்கிற பெயரும் உண்டு. மார்பின் மையத்தில், இருதயம் உள்ள பகுதியில் பன்னிரண்டு இதழ் தாமரை அமைப்பில் பச்சை நிறத்தில் இருக்கிறது. அன்பு, பாசம், இரக்கம், சகோதரத்துவம், விசுவாசம், பக்தி, ஆகிய அனைத்து நல்லியல்புகளின் இருப்பிடமும் இதுவே ஆகும்.தைமஸ் சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இருதயம், நுரையீரல்கள்,இரத்த ஓட்டம், ஆகியவையும் இதன் ஆதிக்கத்தில் இருக்கின்றன.

## 5. விசுத்தி:

இதற்கு குரல்வளைச் சக்கரம் என்றொரு பெயரும் உண்டு. இது பதினாறு இதழ்கள் கொண்ட தாமரையாக நீல நிறத்தில் இருக்கிறது. தொடர்பு கொள்ளுதல், எண்ணங்களை வெளிப்படுத்துதல், படைப்பாற்றல் ஆகியவை இதன் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. நம்முடைய புலன்களுக்கு அப்பால் அறியக்கூடிய விஷயங்களை இதன் மூலமாகத்தான் அறிகிறோம். தைராய்டு சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. குரல்வளை, மூச்சுக்குழல், உணவுக்குழல், கைகள் இதன் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

## 6. ஆக்கினை:

இதை நெற்றிக்கண் சக்கரம் என்றும் சொல் வார்கள். இரண்டு புருவங்களுக்கு மத்தியில் சற்று மேலாக கருநீல நிறத்தில் இரண்டு இதழ் தாமரை சின்னத்தில் அமைந்திருக்கிறது. தொலை உணர்தல் ( Telepathy ) தொலை அறிதல் போன்ற சக்திகள் இதன் மூலமாகத்தான் கிடைக்கின்றன. அறிவு சங்கல்பம், மனவலிமை, ஆகியவற்றின் இருப்பிடம் இது. இதன் மூலம்தான் விஷயங்களை உருவகப்படுத்திப் பார்க்க முடிகிறது. இந்தக் கண் திறக்கின்ற போது ஆன்மீகக் கண் திறப்பதாக ஞானிகள் சொல்கிறார்கள்.பிட்யூட்டரி சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தண்டுவடம், மூளையின் கீழ்பகுதி, கண்கள், மூக்கு, காதுகள் ஆகிய அவயங்கள் இதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.

## 7.தூரியம்:

இதற்கு சகஸ்ரஹாரம், தாமரைச் சக்கரம் என்ற பெயருகள் உண்டு. இது உச்சந்தலை பகுதியில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாம ரை வடிவத்தில் கருஞ்சிவப்பு நிறத்தில் அமைந் திருக்கிறது. இந்தச் சக்கரத்தின் மூலம்தான் ஒருவர் ஞானத்தைப் பெறமுடியும். பிரபஞ் சத்துக்கும், நமக்கும் உள்ள தொடர்பினை தெளிவு படுத்துகின்ற சக்கரம் இது. என்ன நடக்கப் போகிறது என, அல்லது எதைச் செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே உணர்கின்ற சக்தி இதிலிருந்துதான் கிடைக்கிறது. பீனியல் சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்த சுரப்பியை மூன்றாவது கண் என்றும் கூறுவார்கள். மூளையின் மேல்பகுதி இதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

மேற்கண்ட 7 சக்கரத்தையும் கையாளத்தெரிந்த மனிதன் தெய்வத்திற்கு நிகராக இருப்பான் என்று கூறப்படுகிறது.

# தேடி அலையும் ஆத்ம ஞானம்... கிடைக்க உதவும் குழந்தை தெய்வம்

# பாலா

மனித வாழ்வு மேன்மையாக இருக்க நமது முன்னோர்கள் பல்வேறு வழிமுறைகளை வகுத்து ஆராய்ந்து கொடுத்திருந்தாலும், நாகரீகம் என்ற மோகத்திலும், வெளிநாட்டு நடை, உடை, பாவனையாலும் மனிதன் முழுவதுமாக மாறி யிருந்தாலும், மனதிற்குள் ஏதோவொரு தேடல் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

கோடி கோடியாக பணம் சம்பாதித்தாலும் மனம் எதையோ தேடும்.

அனைத்துவித வசதி, வாய்ப்பு கிடைத்தாலும் மனம் எதையோ நாடிக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு, மனது தேடுவது எதை என்று தெரி யாமல், அப்போதைய தீர்வாக, ஒரு சில பொழுது போக்கை நாடுவது வாடிக்கை, அந்த பொழுது போக்கு முடிந்ததும் மனம் மீண்டும் தனது தேடலை துவங்கிவிடும்.

தற்போதைய மனிதனின் நிலை இதுதான்.

இந்த மனத் தேடலில் சிக்கும் மனிதனுக்கு, மனம் தேடுவது இறை சக்தியை என்று தெளி வாக எடுத்துக் கூறியவர்கள்தான் நமது முன் னோர்கள்.

குறிப்பாக இந்த தேடல் எண்ணம் உதித்து விட்டால் ஒருசில விஷயங்களின் மீதுள்ள பற்று தானாக மறையத் துவங்கும். இதுபோன்ற மனநிலை பெற்றவர்கள் ஆத்ம ஞானத்தைத் தேடி தனது அடுத்த கட்ட பயணத்தை துவக்கு வார்கள்.

ஆத்ம ஞானம் பெற விரும்புபவர்கள், ஆத்மாவை மேம்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள் தவறாமல் அவசியம் பாலாவை வழிபட வேண்டும். ஆன்மிக பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் அனைத்து சித்தர்களும், ஞானியர்களுக்கும் பாலா என்கிற பாலா திரிபுர சுந்தரி மிகப் பெரிய ஞானமார்க்கத்திற்கு வழிகாட்டியாகவே விளங்கு கிறார்.

மந்திரஜபத்தில் கண பதிக்குஅடுத்ததாக வருவது ஸ்ரீ பாலா மந்திரம். ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியாகிய பராசக்தி, விரும்பி எடுத்துக்கொண்ட குழந்தைப்பருவ வடிவமே ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி. எந்த யோகப் பயிற்சி முறையை பின்பற்றி சித்தர்கள் சித்தி அடைந்தாலும் அனைவரும் வழிபட்ட தெய்வம் அன்னை ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரியே.



மேலும் பாலாவைப் பற்றி பல சித்தர்கள் பலவாறாக குறிப் பிட்டுள்ளனர்.

வாலையை பணியாமல் சித்தராக முடியாது !,

அவளை யறியா அமரரும் இல்லை, அவளின்றிச் செய்யும் அருந்தவம் இல்லை, அவளின்றி ஐவரால் ஆவதொன்றில்லை, அவள் சக்தி.

சக்தியில்லையேல் நம்மால் எதுவுமே செய்ய முடியாது ! உடலில் சக்தி இருந்தால் தானே நடமாட முடியும் ! பின்னரல்லவா தவம் செய்வது?! ஆக சக்தி இல்லையெனில் ஒன்றும் செய்ய இயலாது !

சக்தி வாலை துணையின்றி பஞ்சகிர்த்தியம் புரியும் மூர்த்திகளாலும் ஒன்றும் செய்ய இயலாது ! பஞ்ச பூதங்கள் இயங்க சக்தி வேண்டும். நம் புலன்கள் இயங்க சக்தி வேண்டும் !. ஏன்? சிவத்தோடு சக்தி இருந்தாலே இயக்கம் ! எங்கும் சிவமயம் ! சிவம் சக்தி மயம் ! அவளே வாலை ! தாய் !

அந்த தாய் வாலை அருள் தந்து அமுதம் ஊட்டி அவள் ஆசி பெற்றே சிவன் இருக்கும் ஊருக்கு போக முடியும் ! சிவனருள் பெற முதலில் சக்தியருளே வேண்டும் !

நம்மை கருவாய் வயிற்றில் சுமந்து பெற்ற தாயை விட கோடி கோடி பங்கு நம்மை அன்புகாட்டி அமுதூட்டி அரவணைபவள் வாலைதாயே !

உலக அன்னை ! அண்டமெல்லாம் நிறைந்த அகிலாண்டேஸ்வரி !

அவளை அறியாத பேர்க்கு மாயை ! மகாமாயை அவளே ! அறிந்து பணிந்தவருக்கு அமுதூட்டும் அன்னை !

வாலையை பணியாமல் யாரும் தேவ ராக முடியாது ! சித்தராக முடியாது ! ஞானியாக முடியாது ! சிவமே சக்தியை தன்னோடு சரிபாதியாக கொண்டார் எனில் சக்தியின் மகத்துவம் புரியவேண்டாமா?

“சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி செம்பவள மேனி கொண்ட சக்தியவள் வாலையே !

அம்பிகையை பல வடிவங்களில் பக்தர்கள் வழிபடுகின்றனர். அவற்றில் குழந்தை வடிவமாக பாலா திரிபுரசுந்தரியாக அருளும் வடிவத்தின் பெருமைகள் சொல்லில் அடங்காதவை. லலிதா பரமேஸ்வரியின் விளை யாட்டின் ரூபமாக பண்டாசுர வதத்தின்போது தோன்றியவள் பாலாதேவி. பண்டாசுர வதம் நடந்தபோது பண்டாசுரனின் புதல்வர்கள் போருக்கு வந்ததும் அவர்களை வதம் செய்ய பாலாதேவி தோன் றினாள். லலிதையின் அங்கத்திலிருந்து தோன்றியவள். இப்போதும் ஒன்பது வயது தோற்றத்தோடு கூடியதால் ‘ஸதாநவவர்ஷா’ எனவும் (ஸதா எப்போதும், நவவர்ஷா ஒன்பது

வயதினள்). லலிதாம்பிகையினுடய வில்லிலிருந்து தோன்றிய வெள்ளை அன்னங்கள் பூட்டிய கர்ணீ ரதத்தில் ஏறி பண்டனின் புதல்வர்கள் முப்பது பேரையும் அழித்ததால் ‘பண்டபுத்ர வதோத்யுக்த பாலா விக்ரம நந்திதா’ (74ம் நாமம்) மற்றும் ஸ்ரீபாலா லீலாவிநோதி நீ: (965ஆம் நாமம்) எனவும் லலிதா ஸஹஸ்ர நாமத்தில் வஸின்யாதி வாக்தேவதைகள் இத்தேவியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

என்று பல யோகிகள், ஞானிகள், சித்த புருஷர்கள் வாலைத்தாய் ஸ்ரீபாலாவைப் பற்றி பலவிதமான கருத்துக்களை கூறியுள்ளனர்.

எல்லா யோகிகளுக்கும் யோக முதிர்ச்சியின் போது அன்னை ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி காட்சியளிக் கிறாள் என்று சித்தர் நூல்கள் கூறுகின்றன. மேலும் சில ஞானியாரின் பாடல்களும் நூல் களும் இதை ஒப்புக்கொள்கின்றன.புனித மறைகளும், சித்தர்களும் ஞானியரும் இறைவன் நமக்குள்ளே தான் இருக்கிறான் என்று கூறுகின்றனர்

ஆனால் இது ஒரு தகவலாக நமக்கு புரிந்தாலும் எவ்வாறு, எங்கு நமக்குள் உள்ளான் என்று நமக்கு நாமே கேட்டுக்கொண்டால் பதில் உண்டா நம்மிடம். அந்த இறை சக்தி முதலில் அன்னை ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரியாகவே வெளிப் படுகின்றது பின்னர் அவள்தான் அந்த பிரம்மத்தை நோக்கிய நம் பயணத்திற்கு கைப்பிடித்து அழைத்து செல்லும் கருணைக்கடல்.

சிவம் என்பது அசையப்பொருளாக உள்ளது அதுவே மூலசக்தி அதை இயங்க வைக்கும் ஆற்றலே அன்னை பராசக்தி.மும்மூர்த்திகளின் செயல் ரூபமே சக்தி.

ஸ்தோத்திரங்களை, ஸ்லோகங்களை விட மூலமந்திர ஜெபம் அந்த குறிப்பிட்ட தெய்வத்திற்கு அருகில் விரைவாய் அழைத்துச் செல்லும். பீஜம் என்றால் விதை எப்படி விதைக்குள் மரம் அடக்கமோ அப்படி பீஜத்திற்க்குள் தெய்வங்கள் அடக்கம். எனவே பீஜ மந்திரஜபம் உயர்வாக சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி மந்திரங்கள்:

1. ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி திரியட்சரி மந்திரம்:

**ஓம் |ஐம்|க்லீம்|சௌம்|**

இதில் சௌம் என்பதை “சௌஹும் “என்று சொல்லுவது சிறந்தது.

ஐம் என்ற பீஜம் வாக்பீஜம் எனப்படுகிறது. பிரம்மா. சரஸ்வதி இவர்களின் அம்சம்.இம் மந்திரம் நல்ல வாக்குவன்மை (பேச்சாற்றல்), வாக்குபலிதம், ஞானம், அறிவு இவற்றைத் தரும்.

**ஸ்தோத்திரங்களை, ஸ்லோகங்களை விட மூலமந்திர ஜெபம் அந்த குறிப்பிட்ட தெய்வத்திற்கு அருகில் விரைவாய் அழைத்துச் செல்லும். பீஜம் என்றால் விதை, எப்படி விதைக்குள் மரம் அடக்கமோ அப்படி பீஜத்திற்க்குள் தெய்வங்கள் அடக்கம். எனவே பீஜ மந்திரஜபம் உயர்வாக சொல்லப்படுகிறது.**

க்லீம் என்ற பீஜம் காமராஜபீஜம் எனப்படும். இதில் விஷ்ணு, லக்ஷ்மி, காளி, மன்மதன் இவர் கள் அடக்கம்.

இம்மந்திரம் நல்ல செல்வம், செல்வாக்கு, கௌரவம், வசீகரசக்தி, உடல், மனபலம் இவற்றை தரும்.

சௌஹும் இப்பீஜத்தில் சிவன், பார்வதி, முருகன் இவர்கள் அடக்கம். சௌம் என்ற பீஜத்தில் இருந்தே சௌபாக்கியம் என்ற வார்த்தை தோன்றியதாக வேதம் கூறுகிறது. இப்பீஜம் சௌபாக்கியம் நிறைந்த வளமான வாழ்வினைத்தரும்.

இவ்வாறு மும்மூர்த்திகளின் பீஜத்தையும் ஒருங்கே கொண்டவள் வாலைத்தாய் என்ற ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி அன்னை.இவள் மந்திரத்தை முறையாய் ஜெபித்து நல்வாழ்வு வாழ்ந்து ஆன்மீகத்திலும் ,வாழ்விலும் உயர்ந்த நிலையை அடையலாம்.

2.ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி சடாட்சரி மந்திரம்:

**ஓம்|ஐம் க்லீம் சௌம்|சௌம் க்லீம் ஐம்||**

3.ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி நவாட்சரி மந்திரம்:

**ஓம்|ஐம் க்லீம் சௌம்|சௌம் க்லீம் ஐம்||ஐம் க்லீம் சௌம்||**

முதலில் திரியட்சரம் ஜெபித்து சித்தியடைந்த பின் சடாட்சரியும் பின்னர் நவாட்சரியும் ஜெபித்தால் மிகுந்த பலன் கிடைக்கும்.

இந்த தாயை வாலை என்றும் பாலம்பிகா என்றும் அழைப்பர். சித்தர்கள் அனைவரும் தங்களின் பாடலில் வாலை கும்மி பாடி வணங்கி தொடங்குகின்றனர். வாலை தாய் அன்னை அதிபராசக்தியின் 10 வயது பால பருவமாக காட்சியளித்த தோற்றம்.

சித்தர் களின் தலைவன் முருக பெருமானை வணங்கி வந்தால் அன்னை வாலை தாய் அருள் புரிந்து, சித்தி பெற முடியும். முக்தியடைய முடியும். சக்தியை பெற்று பரம்பொருளுடன் இணைத்து முக்தியடைய முடியும்.

பாலா பத்து வயதுள்ள தேவி என்பார் கருவூரார். வாலை சித்தருக்கெல்லாம் தாய். ‘சித்தனோடு சேர்ந்தாளே சித்தாத்தா’ என்பது மெய்யான போற்றுதல். சித்தர்கள் ‘வாலையை’ உயர்த்திப் பேசுவதில் தவறில்லை. உலகம் வாலையில் அடக்கம் என்பது அதைவிட உண்மை. வாலையை பூசிக்க முற்பிறவி நற்பலன் இருந்தால் தான் முடியும் என்பது உண்மை.

வாலை’ பத்து வயது சிறு பெண் தோற்றம் கொண்டிருந்தாலும் அவளே நமது அன்னை. அவளை தியானித்து அனுபவிப்போருக்குத் தெரியும் எத்தனை அற்புத காட்சியெல்லாம் அவள் காட்டுவிப்பாள் என்பது. வாலையை வழிபடுவோர்க்கு சுகம், பரமசுகம் கிடைக்கும். அவள் நல்லவர்க்கு நடுவே விளையாடுவாள். வல்லவர்க்கெல்லாம் வல்லவளாய் ஆட்சி செய்வாள். அவளை விட அரியதான சூட்சமம் ஏது? என்கிறார் கருவூரார் சித்தர் பெருமானார்.

அவள் உன்னதமான சூட்சுமக்காரி. நாத தத்துவத்தையும், சுத்த மாயயையும் , ஓங்கார நிலையையும் அவள் தன் உபாசகனுக்கு உணர்த்துவாள். ‘ஓங்கார சொருபிணி’ என்று சித்தர் கூட்டம் அவளையே போற்றும்.

பாலாதேவியின் திருவருள் கிட்டினால் லலிதாம்பிகையின் திருவருளும் உடனே கிட்டும் என்பது உபாசனா ரகஸ்யம். இந்த பாலா மந்திரம் த்ரைலோக்ய வசகாரிணீ என்று மந்திர சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

இவள் தன் இடக்கரத்தில் புத்தகத்தை ஏந்தி யிருப்பது சகல வித்யைகளையும் சாதகர்களுக்கு அருளவே. (பங்கய வாசனப் பாலைக் கமலைப் பராசக்தியே கமலை பராசக்தி மாலை) இவள் மறு கரத்தில் கொண்டுள்ள ஜபமாலை, அம்பிகையின் நாமத்தை அனைவரும் உச்சரிக்க வேண்டும் என்பதை உணர்த்தவே. அபய வரத கரங்கள் பக்தர்களைக் காக்கவும் கேட்ட வரங்களைத் தரவும் தயாராக உள்ளன. நித்ய கல்யாண சீலையான இவள், (நிவஸதி ஹ்ருதி பாலா நித்ய கல்யாண சீலா பாலா தியான சுலோகம்) சகல நலன்களையும் இம்மையில் தந்து, மறுமையில் வீடு பேற்றையும் அளிக்க வல்லவள்.

வாலையை வணங்கினால் நோய்கள் விலகும். வாழ்வில் மென்மேலும் வளமும், கல்வி கேள்வி களில் சிறந்த ஞானம் கிடைக்கும் என்பது ஐதீகம். வாலையை வேண்டினால் கல்யாணம், குழந்தை, குடும்ப ஐஸ்வர்யம் ஆகிய வரங்களை அள்ளி தருபவள் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது. இவளை சரண் அடைந்தால் எதை அடைய விரும்புகிறோமோ அது தானாய் வந்து சேரும் என்பது சித்தர்களின். நம்பிக்கை.

இவளை திரிபுரை என்றும் , வாலை என்றும் ,பத்து வயதாளென்றும், பதினாறு வயதாள் என்றும், கன்னியென்றும்,பச்சைநிறத்தாளென்றும், சக்கரத்தாளென்றும், வாமியென்றும், தேவி யென்றும், மாயையென்றும், புவனையென்றும், அன்னையென்றும், ஆவுடையாளென்றும், தாரை யென்றும், அமுதக் கலசமென்றும், தாயென்றும் உண்ணாமுலையென்றும், கோவுடையாளென்றும், அண்ட பேரண்டங்களைக் கட்டிக் காக்கின்ற அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி என்றும் அழைப்பார்கள்.

வைத்தீஸ்வரனான ஈஸ்வரனே இவள் தயவில்தான் மண்ணையே மருந்தாகக் கொண்டு வைத்தீஸ்வரன் கோவிலில் வைத்தியம் புரிந்து வருகிறான். இவளை அறிய ஏழு பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள் சித்தர்கள். இவளால் தர இயலாதது எதுவும் இல்லை. இவளைப் பூசை செய்யும் முறையைப் பற்றி சட்டை முனி சித்தர் தனது “சட்டைமுனி ஞானம்4 ல் (பாடல் 1 முதல் பாடல் 4 வரையில்) கூறியுள்ளார். அதேப்போன்று பட்டினத்தார் தனது “பட்டினத்தார் ஞானம்10 ல் (பாடல் 1 முதல் பாடல் 4 வரையில்) கூறியுள்ளார்.

ஞான மார்க்கத்தை தேடி அலையும் நாமும் இந்த குழந்தைத் தெய்வத்தை வணங்கி, ஞானமார்க்கத்தில் நுழையும் குழைந்தையாக அவள் கரம் பிடித்து சென்றால் கண்டிப்பாக நாம் தேடி அலையும் இறை சக்தி நமக்கு முழுமையாகக் கிடைக்க இந்த பாலா உதவிக்கரம் நீட்டுவாள்.

– ச.நாகராஜன்

# திருக்கோவிலில் வலம் வரவேண்டிய முறை

கோவிலில் செல்லும் அனைவரும் எந்த கடவுளை எப்படி வணங்க வேண்டும் என்று குழப்பம் ஏற்படுகிறது. அந்த குழப்பத்திற்கு எளிமையான விளக்கம்....

விநாயகரை ஒரு முறைதான் வலம் வர வேண்டும்.

ஈஸ்வரனையும், அம்மனையும் 3 முறை வலம் வர வேண்டும்.

அரச மரத்தை 7 முறை வலம் வர வேண்டும்.

மகான்களின் சமாதியை 4 முறை வலம் வர வேண்டும்.

நவக்கிரகங்களை 9 முறை வலம் வர வேண்டும்.

சூரியனை 2 முறை வலம் வர வேண்டும்,

தோஷ நிவர்த்திக்காக பெருமாளையும், தாயாரையும் வணங்குபவர்கள் 4 முறை வலம் வர வேண்டும்,

கோவிலுக்குள் ஆலய பலிப்பீடம், கொடிக் கம்பம் முன்பு தான் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும்.

கோயிலுக்குள் வலம் வரும்போது, ஒவ்வொரு சந்நிதியிலும் கைகூப்பி மட்டுமே வணங்க வேண்டும்.

கீழே விழுந்து வணங்குவது கூடாது. கொடிமரத்தைத் தாண்டி வந்து மூலவருக்கு நேராக மட்டும் கீழே விழுந்து வணங்க வேண்டும்.

கிழக்கு, மேற்கு நோக்கிய கோயில்களில் வடக்கு நோக்கி தலை வைத்தும், வடக்கு, தெற்கு பார்த்த கோயில்களில் கிழக்கு நோக்கி தலை வைத்தும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

சிவனுக்குரிய ஸ்லோகம் ஒன்றில், சாஷ்டாங்க நமஸ்காரத்தால் இருவித பாவங்கள் நிவர்த்தியாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்று போன பிறவியில் நமஸ்காரம் செய்யாதது, மற்றொன்று அடுத்த பிறவியில் நமஸ்காரம் பண்ணாமல் இருக்கப் போவது. முற்பிறவியில் சிவனுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்திருந்தால், இந்த பிறவி நமக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. இப்போது சிவனை வணங்கி விட்டதால் அடுத்த பிறவி எடுக்கவும் வாய்ப்பில்லை என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.











# அறிவியலை பின்னுக்கு தள்ளிய உபநிடதங்கள்

அறிவியல் கண்டுபிடிப்புகளைவிட இந்து சமயத்தின் உபநிடதங்களும், ஆன்றோர்களின் கணிப்புகளும் மிகத் துல்லியமானவை என்பதை இன்றைய காலகட்டத்தில் ஆதாரப்பூர்வமாக நாம் காண்கிறோம்.

அணுவைப் பற்றி நமது முன்னோர் முன்பே கூறியுள்ளனர். அவர்கள் கூறிய வார்த்தையை நாம் சரியான முறையில் பயன்படுத்தவில்லை.

நேற்றைய அறிவியல் உண்மை இன்றைக்கு உண்மையல்ல என்று நிரூபிக்கப்படுகிறது. சுமார் 200 ஆண்டுகளாக விஞ்ஞானிகள் ஆணித் தரமாக உண்மை என்று நம்பி வந்த நியூட்டனின் பௌதிகம் ஐன்ஸ்டீனின் கண்டுபிடிப்புகளுக்குப் பின் உண்மையில்லை என்றாகி விட்டது.

இப்படி வருடங்களில் அறிவியல் சித்தாந் தங்கள் முன்னுக்குப் பின் முரணாக மாறி வருகின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய உபநிடதங்களில் இன்றைய அறிவியல் உண்மைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன என்றால் அது நமது இந்து மதத்திற்கு பெருமையல்லவா?

முதலில் இன்றைய அறிவியல் என்ன சொல் கிறது என்று பார்ப்போம். பெரிய டெக்னிகல் வார்த்தைகளுக்குப் போகாமல் பொதுவாக கண்டறியப்பட்ட சில உண்மைகளைப் பார்ப்போம்.

அணுக்களில் இருந்து x கதிர்களும், பலவித மான சக்தி வெளிப்பாடுகளும் வெளிப்படுவதைக் கண்ட விஞ்ஞானிகளுக்கு அணுவுக்குள் என்ன இருக்கிறது என்று அறிய ஆவல் ஏற்பட்டது. அணுவை அதை விட நுட்பமான ஆல்பா கதிர்களால் துளைத்துப் பார்த்தார்கள்.

அணுவுக்குள் உள்ளே பெரும்பாலும் வெட்ட வெளியாக இருப்பதையும் மையத்தில் கரு போல சில ப்ரோட்டான் துகள்களும் அவற்றைச் சுற்றி யபடி சில எலக்ட்ரான் துகள்களும் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டனர். உதாரணமாக ஒரு மிகப் பெரிய மண்டபத்தை அணுவென்று எடுத்துக் கொண்டால் கடுகு அளவு தான் அதன் உட்கரு இருந்தது.

அந்த அணுத்துகள்களை ஆராய்ந்த போது தான் விஞ்ஞானிகள் குழம்பிப் போனார்கள். எதையும் ஆணித்தரமாக சொல்லும் சக்தி படைத்ததாக கருதப்பட்ட விஞ்ஞானம் அணு வைப் பிளந்து பார்த்த போது பிரமித்து பேச்சி ழந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். காரணம் அந்தத் துகள்கள் சில சமயங்களில் திடப் பொருளாகக் காணப்பட்டாலும் சிலசமயங் களில் அலைகளாக மாறுவதைக் கண்டு அதிசயித்தார்கள். துகள் என்றால் அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அது ஓரிடத்தில் இருக்க வேண்டும். அலை என்றால் அது எங்கும் பரவி இருப்பது.

ஆனால் ஒரே வஸ்து இந்த முரணான இரட்டை நிலைகளில் எப்படி இருக்க முடியும்? சில சமயங்களில் பார்க்கின்ற போதே பார்க்கும் விதத்திற்குத் தக்க துகள்கள், அலைகள் என மாறிக் காட்சி அளிக்கும் இந்த வினோதம் விஞ்ஞானம் இது வரை கண்டிராதது. இதுவே ஐன்ஸ்டீன் சொன்ன க்வாண்டம் சித்தாந்தத்தின் அடிப்படை தத்துவம்.

மேலும் ஒரு துகள் அணுவுக்குள் இந்த இடத்தில் இருக்கும் என்று சொல்ல முடியாது. அங்கு துகள் இருக்கலாம். இல்லாமலும் இருக்க லாம். ஒரு கோணத்தில் பார்க்கும் போது துகளாகத் தெரிவது வேறொரு கோணத்தில் காணாமல் போய் அலையாக மாறி கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஒரே நேரத்தில் இரண்டு மாய் எப்படி அது இருக்க முடியும் என்பதை விஞ் ஞானம் விளக்க முடியாமல் திணறியது.

கடைசியில் அணுவைப் பிளந்த விஞ்ஞானம் உள்ளே இருக்கும் துகள்களை சக்தியின் வெளிப்பாடான பல வடிவங்களாகக் கண்டது. அவை சதா சஞ்சரித்துக் கொண்டிருப்பதையும், ஒன்றுடன் ஒன்று உறவாடுவதையும், தத்தம் சக்திகளைப் பரிமாறிக் கொள்வதையும் விஞ் ஞானிகள் கண்டனர். அவை சக்திகளை பல விதங்களில் வெளிப்படுத்துவதையும், புதிது புதிதாக மாறுவதையும் கண்டு அதிசயித்தனர்.

இயற்கை விஞ்ஞானிகளுக்கு வசதியாக எதையும் தனியாகப் பிரித்துக் காட்டவில்லை. அவர்களால் உணர முடிந்ததெல்லாம் அந்த துகள்களின் இயக்கத்தின் விளைவுகளையே.

முடிவில்லாத இந்த இயக்கத்தின் விளைவாக ஏற்படும் ஒட்டு மொத்த வடிவமைப்பே நாம் காணும் பொருள்கள். உண்மையில் பிரபஞ்சம் முழுவதுமே ஓர் சக்தி இயக்கம் தான், உலகமே சக்தியின் துடிப்பு தான் என்ற முடிவுக்கு விஞ் ஞானம் வந்திருக்கிறது.

சில உண்மைகள் தெளிவாக வார்த்தைப்படுத்த முடியாதவை என்பதையும் அறிவியல் ஒத்துக் கொண்டு இருக்கிறது.

இப்போது சில உபநிடதங்கள் சொல்வதைப் பார்ப்போம்.

சந்தோக்ய உபநிடதத்தில் பிரபஞ்சத்தின் மூலத்தை விளக்க முற்பட்ட ஒரு குரு தன் சிஷ்யனிடம் ஒரு ஆலமரத்தின் பழத்தைக் கொண்டு வரச் சொன்னார்.

"இந்தாருங்கள் குருவே"

"அதை உடை"

"உடைத்தேன் குருவே"

"உள்ளே என்ன இருக்கிறது?"

"மிக நுணுக்கமான சில துகள்ப் பொடிகள்"

"அதையும் உடை"

"உடைத்தேன் குருவே"

"அதனுள் என்ன பார்க்கிறாய்?"

"ஒன்றும் இல்லையே குருவே"

"உன் கண்ணுக்குப் புலப்படாத அந்த சூட்சும சூனியத்தில் தான் அந்தப் பெரிய ஆலமரத்தின் மூலம் இருக்கிறது. அது போல சூட்சும சக்தியில் தான் ஒவ்வொன்றின் மூலமும் இருக்கிறது. இந்தப் பிரபஞ்சமும் அந்த சூட்சும சக்தியில் தான் இருக்கிறது. இயங்குகிறது"

அணுவை உடைத்து அறிவியல் அறிஞர்கள் கண்டதும் இதையே அல்லவா?

கதோபநிடதத்தில் எமதர்மன் நசிகேதனிடம் சொல்கிறார். "ஆத்மா என்பது நுணுக்கத்திலும் மிக நுணுக்கமானது. அதை வாதங்களால் அறிய முடியாது. உணர மட்டுமே முடியும்?"

ஈசோபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது:

"அது நகர்கிறது. அது நகர்வதில்லை.

அது தூரத்தில் இருக்கிறது. அது போல அருகேயும் இருக்கிறது.

அது எல்லாவற்றின் உள்ளேயும் இருக்கிறது.

அது எல்லாவற்றின் வெளியேயும் இருக்கிறது"

பிரகதாரண்ய உபநிடதம் சொல்கிறது: "பிரம்மம் என்பது வடிவில்லாதது. அழிவில்லாதது. சதா இயங்கிக் கொண்டிருப்பது....."

இதையெல்லாம் முதலில் சொன்ன அறிவி யல் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நம் முன்னோர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்த அறிவியல் உண்மைகளை அறிந்தும் உணர்ந்துமிருந்தார்கள் என்று தோன்றுகிறது அல்லவா?

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலியில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

## ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது. அழகிய வண்ணங்களுடன், கண்ணைக்கவரும் விதத்தில் புத்தம் புதிய பொலிவுடன், அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும் சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும் தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

உதவ விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

**7299992699 / 8825844033**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

# மரண பயத்தைப் போக்கும் கிரியா யோக விஞ்ஞானம்

11 பாகம்

இறைவன் மனிதனை பூமிக்கு அனுப்பியதன் நோக்கம் என்னவெனில், மனிதனின் மனம் இறைவன் மேல் உள்ளதா அல்லது உலகப்பொருள் மேலுள்ளதா என்பதை அறிவதற்காகத்தான்.

ஆனால், அவன் உலகப்பொருளிலும் உலக வியாபாரத்திலும்தான் ஆழ்ந்து சென்று கொண்டிருக்கிறான். அவ்வாறு சென்றாலும் அதிலிருந்து மீண்டும் இறைவனிடத்தில் திரும்புவதற்கு உண்டான வழிகளையும் இறைவன் தந்துள்ளான். அதை மனிதன் பயன்படுத்த வேண்டும். அவ்வழிகளை பயன்படுத்துபவர்கள் உலகமெனும் மாயை வலையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதற்கான வழியே முந்தைய பாகத்தில் கூறப்பட்டுள்ள கிரியா யோக விஞ்ஞானம்.

## கிரியா யோகம் கர்ம வினையின் சிறைக்கம்பிகளை துண்டித்து விடுகிறது

பரமஹம்ஸர் கூறுகிறார்: "அன்புக்குரியவர்களே, இவ்வுலகத்திலிருந்து விலகிச் செல்லுங்கள். இமயமலையில் உள்ள ஒரு குகைக்கு பறப்பதால் அல்ல, உங்கள் உடல் மற்றும் இவ்வுலகிலிருந்து விடுபட்டுள்ள உங்களுடைய மனதின் குகைக்கு செல்வதன் மூலம். கிரியா யோகத்தைப் பயிற்சி செய்யுங்கள். நீங்கள் நிச்சயமாக ஆன்மீகப் பாதையில் வெற்றி அடைவீர்கள். அது எனது சொந்த அனுபவம். கிரியா யோகத்தின் விடுவிக்கும் ஆற்றல் கர்மவினையின் சிறைக்கம்பிகளை துண்டித்துவிடுகிறது.

கிழக்கிலோ அல்லது மேற்கிலோ இது போன்ற ஓர் உயர்ந்த உத்தியை நான் ஒருபோதும் கண்டதில்லை. கிரியா மற்றும் யோகதா சத்சங்க சொசைட்டி ஆஃப் இந்தியா / ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப்ன் பாதையை பின்பற்றுகின்ற ஒவ்வொரு வரும் வெகுவாக முன்னேற்றமடைவர். தியானம் செய்து ஒரு சில வருடங்களுக்குப் பிறகு உங்களுக்குள் பலன்களைக் காணுங்கள். உங்களுக்கு சிறிது கால அவகாசம் கொடுங்கள். உடனடி யாக பலனை எதிர் பார்க்காதீர்கள். உடல் நலத்தையோ செல்வத்தையோ ஓரிரவில் நீங்கள் ஈட்ட முடியாது. சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். ஒரு பழக்கத்தை உருவாக்க எட்டு ஆண்டுகள் தேவைப்படுகிறது. நீங்கள் எட்டு ஆண்டுகள் தியானம் செய்து கிரியாவை ஆழ்ந்து பயிற்சி செய்தால் தன்னை வெல்வதற்கான பாதையில் உங்களைக் காண்பீர்கள்."

"ஒவ்வோர் இரவிலும் தியானத்தின் ஒரு பகுதியாக, இவ்வாறு உறுதி கூறுங்கள். மீண்டும் மீண்டும் அதனை உங்களுக்குள் திரும்பச் சொல்லுங்கள். "தந்தையே, தாங்கள் கர்மவினையிலிருந்து விடுபட்டுள்ளீர். நான் உமது குழந்தை. நான் கர்மவினையிலிருந்து விடு பட்டுள்ளேன். இப்பொழுதும் எப்பொழுதும்." அதனை நீங்கள் உணர வேண்டும் என்பதைத் தான் நான் விரும்புகிறேன். இந்த உலகம் நமது வீடல்ல. நமது இல்லம் மறுபக்கத்தில், இறைவனது பிரபஞ்ச உணர்வில் உள்ளது. அங்கே அணுக்களின் பின்னே பாதுகாப்புடனும் நலமுடனும் நாம் நம் தந்தையின் சாம்ராஜ்யத்திலிருக்கிறோம். உங்கள் அனைவருக்காகவும் நான் பிரார்த்திக்கிறேன்."

"இறைவா, நான் காண்பது உனது ஒளியைத்தான். இந்த யோகதா பாதையிலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்காகவும் நான் ஆழ்ந்து பிரார்த்திக்கிறேன். விரைவில் அவர்கள் அனைவரையும் அவர்களது கர்மவினை, கூட்டுக் கர்ம வினை ஆகிய பயங்கரமான மாயையிலிருந்து விடுவிப்பாய். எங்களிடம் எல்லா நடத்தைத் தவறுகளும், நாங்கள் செய்யாமல் விட்டுவிட்ட அனைத்தும் மற்றும் அறியாமையும் இருந்தாலும் நாங்கள் உனது குழந்தைகளே. கர்மவினையின் சிறைக் கம்பிகளுக்குப் பின்னே இருந்தாலும் நாங்கள் உம்முடன் ஒன்றுபட்டுள்ளோம் என்பதை எங்களுக்கு எப்பொழுதும் நினைவூட்டுவாய். நாங்கள் எங்கள் கண்களை மூடிய உடனேயே பரவச நிலையில் சென்ற உடனேயே நாங்கள் உனது சாயலில் படைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிவோம். நாங்கள் விடுதலை பெற்றவர்கள். "ஓ, இறைவா, உனது அன்பு திணறச் செய்கிறது. நாங்கள் உனக்கு தலை வணங்குகிறோம்."

மனித வாழ்வு மேம்படுவதற்காக

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**







## காலத்தின் முக்கியத்துவம்

பரமஹம்ஸ யோகானந்தர் கூறுகிறார்: "ஒரு குழந்தை சிறு வயதிலேயே இறக்கிறது என்றால், அதற்கு ஒரு காரணமும் உண்டு. அவனது மானிட அல்லது தெய்வீக உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்த அவனுக்கு போதிய காலம் இல்லாததால், அவ்வாறு செய்வதற்கு அவனுக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்தகைய நபர் நோய்வாய்ப்பட்டு பள்ளிக்கு செல்ல முடியாத சிறுவனைப் போன்றவர்.

சிறுவன் என்றென்றைக்குமாக பள்ளியை விட்டுவிடுவதில்லை. அவன் குணமடைந்தவுடன் தனது பாடங்களை எங்கு விட்டானோ அதிலிருந்து தொடங்குவதற்கு அவன் மீண்டும் பள்ளிக்குச் செல்கிறான். அது போன்றுதான் வாழ்க்கையிலும்கூட. இந்த வாழ்க்கையில் நமது பாடங்களை கற்றுகொள்ள நாம் ஒரு வாய்ப்பை பெறவில்லை என்றால், அவைகளை வேறு எதாவது ஒரு பிறவியில் கற்க வாய்ப்புகள் பெறுவோம். குழந்தைப் பருவத்திலிருந்தே மனதில் அந்தப் போராட்டத்தைப் பெற்றிருக்கிறீர்களா? அது மூன்றாவது அல்லது க்ஷத்திரிய நிலையைப் பிரதிபலிக்கிறது.

ஆனால், குழந்தைப் பருவத்திலிருந்தே, உங்கள் எண்ணங்கள் இறைவனைப் பற்றியே எப்பொழுதும், இருந்திருந்தால் நீங்கள் நான்காவது அல்லது ' பிராமண ' ஆன்மீக நிலையில் நுழைந்திருக்கிறீர்கள். தெய்வீக அல்லது பிராமண பிரிவில் பிறப்பது மிகச் சிறந்ததாகும். அந்த தெய்வீகப் பிரிவின் சிறிதளவு உங்கள் அனைவரிடத்திலும் உள்ளது. இல்லையென்றால், இன்று காலை நீங்கள் இங்கே இருந்திருக்கமாட்டீர்கள். இறுதியானதும் மிகவும் உன்னதமுமான நிலை பிராமணனுடையது. பிரம்மா அல்லது இறைவனை அறிந்தவன் (பிராமணன் தனது கீழான இயல்புகளை வென்று, ஆன்மீக நாட்டங்களுக்கான ஓர் இயல்பான ஈர்ப்பைக் கொண்டுள்ளான். மேலும் அவன் கடவுளை அறிந்துள்ளவன். அதனால் அவன் மற்றவர்களுக்கு போதிக்கவும், விடுதலை பெறுவதற்கு உதவவும் இயலும்.)"

## கர்ம வினைக்கு மேல் எழ மூன்று வழிகள்

மேலும் அவர் கூறுகிறார்: "நீங்கள் கர்ம வினைக்கு மேல் எழுவதற்கு விரும்பினால் இந்த மூன்று உண்மைகளை உணர்வதற்கு முயலுங்கள் :

1. மனம் வலிமையாகவும் இதயம் தூய்மையாகவும் இருக்கும்பொழுது நீங்கள் விடுபட்டிருக்கிறீர்கள். உங்களை உடல் வலியுடன் இணைப்பது மனம் தான். நீங்கள் தூய எண்ணங்களை நினைத்து மனதால் வலிமையாக இருக்கும்பொழுது நீங்கள் தீய கர்மவினையின் வேதனையான விளைவுகளால் துன்புற முடியாது.

2. ஆழ் உணர்வு நிலை உறக்கத்தில்நீங்கள் விடுபட்டிருக்கிறீர்கள்.

3. நீங்கள் இறைவனுடன் ஐக்கியமாகி ஆனந்தப் பரவசத்தில் இருக்கும்பொழுது, உங்களுக்கு கர்ம வினையே கிடையாது. இதனால்தான் மகான்கள் கூறுகின்றனர், "இடையறாது பிரார்த்தனை செய்யுங்கள்." நீங்கள் தொடர்ந்து பிரார்த்தனை செய்து தியானிக்கையில், துன்பம் உங்களை அடைய முடியாத உயர் உணர்வு நிலை தளத்திற்கு நீங்கள் செல்கிறீர்கள்"

## தீய கர்மவினையை நற்செயலால் அழித்திடுங்கள்

பரமஹம்ஸர் அருளுகிறார்: "கர்மவினையில் கட்டுப்பட்டிருப்பதாகக் கருதுவதற்கு உங்களை அனுமதிக்காதீர்கள். உங்களுடைய கர்மவினை நல்லதோ கெட்டதோ எந்தக் கர்மவினைக் கட்டுப்பாட்டையும் ஒப்புக்கொள்ளாதீர்கள். அதனை மறுத்துவிடுங்கள். தீய கர்மவினையை அழிப்பதற்கு நல்ல கர்மவினையை அவசியம்







www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

பெற்றிருக்கவேண்டும். பின்னர் இரண்டிற்கும் மேல் எழுங்கள். உங்களுடைய கர்மவினையை இறைவனுக்கு அளித்திடுங்கள். இறைவனிடம் நீங்கள் வேண்டினால் அவன் உங்களுக்கு உதவுவான். இறைவனிடம் நம்பிக்கை இருந்தால் எல்லாம் சாத்தியமே. அவனது அருட்பேறு முக்கியம்.”

“உங்களை வெறுப்பவர்களும் தூற்றுபவர்களும் உண்மையை அறிந்தவர்கள் அல்ல. அவர்கள் தம் அறியாமையில் தாம் என்ன செய்கிறோம் என்று அறியாதவர்கள் என்பதால் அவர்களை மன்னிக்கவும். நீங்கள் என்ன தவறு செய்திருந்தாலும் உங்களை நீங்கள் எளிதில் மன்னிப்பதைப்போல் மற்றவர்களின் தவறுகளையும் எளிதாக மன்னிக்க வேண்டும். மற்றவர்களின் குற்றங்களைப் பற்றி இடைவிடாமல் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். சொந்த குற்றங்களப்பற்றியும் பேச வேண்டாம். கடந்த கால பிழையை மன்னிக்கவும், மறக்கவும். பிறருடைய குற்றங்களைப் பற்றி எழுதவும் வேண்டாம். வேண்டுமென்றே உங்களை விமர்சிக்கின்ற உங்களை தவறாகக் குற்றம் சாட்டும் நபர்களுக்குத் தயக்கமின்றி அன்பைக் கொடுக்கவும். அவரகள் உங்களுக்குக் கொடுத்த விஷத்திற்குப்பதிலாகக் கிடைத்த உங்கள் அன்பின் நிலையான பரிசால் அவர்கள் வெட்கப்படட்டும். அவர்களை உங்களுடைய நிபந்தனையற்ற அன்பால் மாற்ற முயற்சி செய்யவும்.”

## கிரியா யோகம் இறை தொடர்பிற்கான மிக உயர்ந்த முறை

பரமஹம்ஸர் கூறுகிறார்; “கிரியா யோகம் இறை தொடர்பிற்கான மிக உயர்ந்த முறையாகும். இறைவனைப் பற்றிய எனது சொந்தத் தேடலில் நான் இந்தியா முழுதும் பயணம் செய்து, அவனுடைய எண்ணற்ற தலைசிறந்த மகான்களின் திருவாய்களிலிருந்து ஞானத்தை செவிமடுத்தேன். ஆகவே, நான் ஸெல்ஃப் ரியலைசேஷன் [யோகதா சத்சங்க] போதனைகளில் இறைவனாலும் மற்றும் மகா குருமார்களாலும் மனித இனத்திற்கு அளிக்கப்பட்ட மிக உயர்ந்த உண்மை மற்றும் விஞ்ஞான ரீதியான யுக்திகள் உள்ளன என்ற உண்மைக்கு உத்திரவாதம் அளிக்க முடியும். கிரியாவுக்குப்பின் காணும் பலன்கள் தம்முடன் பரிபூரண அமைதியையும் ஆனந்தத்தையும் கொணர்கின்றன. “புறப்பொருட்களில் மனம் பற்றாதவன் ஆன்மாவில் இன்பம் எய்துகிறான். பிரம்ம சமாதியில் மனதை உடைய அம்மனிதன் அழியாத சுகத்தைஅடைகிறான்.” (பகவத்கீதைV21) தியானத்தில் அனுபவிக்கப்பட்ட அந்த ஆனந்தத்திலிருந்து ஆயிரம் நித்திரைகளில் கிடைக்கும் ஓய்வை நான் பெறுகிறேன். முன்னேறிய கிரியா யோகிக்கு உறக்கம் நிஜமாகவே தேவையற்றதாகிறது. கிரியா யோகத்தின் மூலம் சமாதியில் நுழையும் போது, அந்நிலையில் அவனுடைய கண்கள் சுவாசம் மற்றும் இதயம் ஆகியவை அமைதியாக்கப்பட்டு, வேறொரு உலகம் பார்வைக்கு தென்படுகிறது. சுவாசம், வலி மற்றும் கண்களின் அசைவு ஆகியவை இவ்வுலகத்தைச் சார்ந்தவை. ஆனால், சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் யோகி தெய்வீக சூட்சும மற்றும் காரண உலகங்களுக்குள் சென்று, அங்கு இறைவனுடைய மகான்களுடன் தொடர்பு கொள்ளக்கூடும் அல்லது பிரபஞ்ச உணர்வுநிலைக்குச் சென்று இறைவனுடன் தொடர்பு கொள்ளக்கூடும். யோகிக்கு வேறு எதிலும் நாட்டமில்லை”

பரமஹம்ஸர் அருளுகிறார்: “நீங்கள் இறைவனுடன் வாழ்ந்தீர்களானால், வாழ்வு மற்றும் மரணம், ஆரோக்கியம் மற்றும் நோய் ஆகிய மாயையிலிருந்து குணப்படுத்தப்படுவீர்கள். இறைவனில் இருங்கள். அவனது அன்பை உணருங்கள். எதற்கும் அஞ்சாதீர்கள். இறைவனின் கோட்டைக்குள் மட்டுமே நாம் பாதுகாப்பாக இருப்பதைக் காணமுடியும். அவனது இருப்பைத்தவிர பாதுகாப்பான ஆனந்தப் புகலிடம் வேறு எங்கும் இல்லை. நீங்கள் அவனுடன் இருக்கும்பொழுது உங்களை எதுவும் தொடமுடியாது. வாழ்க்கையின் கடந்துபோகும் கனவுகளில் பற்று வைக்காதீர்கள். இறைவனுக்காக மட்டுமே வாழுங்கள். இதுதான் இந்த உலகில் விடுதலை மற்றும் பாதுகாப்பு பெற ஒரே வழி. இறைவனுக்கு வெளியே உங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. நீங்கள் எங்கே சென்றாலும் சரி, மாயை உங்களைத் தாக்கமுடியும். இப்பொழுதே சுதந்திரமாக இருங்கள். இப்பொழுதே இறைவனின் ஒரு குழந்தையாக இருங்கள்; நீங்கள் அவனுடைய குழந்தை என்பதை உணர்வதால் இந்த மாயை கனவிலிருந்து என்றென்றைக்குமாக நீங்கள் விடுபடுவீர்கள். ஒரு நாள் இறைவனுடனான ஆனந்தப்பரவசத்தில் நீங்கள் விழித்தெழுவீர்கள். மனிதர்கள் தாங்கள் துன்பப்பட்டுக்கொண்டிருப்பதாக எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை காண்பீர்கள். நீங்கள், நான் மற்றும் அனைவரும் தூய பரம்பொருளே.

அவர் மேலும் கூறுகிறார்: “நான் கூறியதை நினைவில் வைத்துக் கொண்டு, மற்ற எல்லாவற்றிற்கும் குறைந்த முக்கியத்துவம் அளிக்கும் எவரும், தவறாமல் இறைவனை அடைவர். ஒவ்வொருவரும் முடிவாக அங்கே சென்றாக வேண்டும். ஆனால் இந்த உண்மைகளை நீங்கள் பயிற்சி செய்யாவிடில் அவற்றை நான் உங்களுக்குக் கூறுவதால் என்ன பயன்? உங்கள்மீதான எனது அன்பான கவனத்தில் குறையே இல்லை. நான் உங்களுக்கு ஞாபகப்படுத்தினாலும்கூட தியானத்தைப் பயிற்சி செய்வதற்கு தாமாகவே பயிற்சி எடுக்காத எவருக்கும் அவை உதவா. ஒவ்வொரு மனிதனின் இதயத்தில் வீற்றிருக்கும் இறைவனை விட உயர்ந்தவர் எவருமில்லை. நாம் அவனை நாடவேண்டும் என அவன் நம்மை கட்டாயப்படுத்துவதுமில்லை. அவன் நமக்கு சுதந்திர விருப்பத்தை தந்துள்ளான். ஓர் உண்மையான குருவை பின்பற்றி அவருடைய அறிவுரைகளை கடைபிடித்து, அவரிடம் நம்பிக்கை வைத்திருப்பவர் தன் முழுவாழ்க்கையையும் மாற்றிக்கொள்வார். “அந்த ஞானத்தை குருவிடமிருந்து பெற்றபின் நீ இப்படி மயக்கமடைய மாட்டாய்” (பகவத்கீதை IV 35)

இறைவனை அடையவேண்டும் என்ற வைராக்கியத்துடனான ஒருவர் கிரியா யோகத் தை சரியான முறையிலும், தவறாது பயிற்சி செய்தும் நிபந்தனையற்ற தன் அன்பை இறைவனுக்கு நைவேத்யம் செய்வதற்காகவும், ஒவ்வொரு நொடியிலும் “என் இறைவா, என் இறைவா” என்று மௌனமொழி கூறியவாறு, துடித்துக்கொண்டிருக்கும் தன் இதயத்தை அவனுக்குக் காணிக்கையாகச் செலுத்துவதற்கும், “இப்போது வருவான் இறைவன்; இப்போது வருவான் இறைவன்” என்ற அளவிட முடியாத ஏக்கத்துடனும், இறைவனை தவிர இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்ற உண்மையை அறிந்தவாறு இறைவனை நேசிக்கின்ற அவனிடத்தில் சரணாகதி அடைந்த, நிர்மல மனமுடனும், முழு ஆத்மத்துடனும் இறைவனை வரவேற்கக் காத்திருக்கும் இறைபக்தனை, சரணாகதவத்சலனான, இறைவன் அக்கணத்திலேயே தன்னுடன் சேர்த்துக்கொள்வான். இதற்குக் கிரியா யோகம் மவழிகாட்டுகிறது. இந்த யோகம் மனிதனின் உலகப்பற்றினை சிறிது சிறிதாக மனதிலிருந்து அகற்றி இறுதியில் இறைவனையும் பிற ஆன்மாக்களையும் மட்டும் நேசிக்கின்ற மனமாக மாற்றி அமைக்கின்றது.

மேலே கூறியுள்ள ஆன்மீக முன்னேற்றங்கள் கிரியா யோகத்தினால் ஏற்படுகிறது. கிரியா பயிற்சியினால் முன்னேற்றமடையும் பொழுது கர்மவினைகளிலிருந்து ஆத்மா விடுபடுகிறது. ‘சுவாசம்’ என்கின்ற கயிற்றினால் ஆத்மா கட்டப்பட்டிருக்கிறது. கிரியா யோகப் பயிற்சியின் பயனால் ஆத்மாவை கட்டியிருக்கும் சுவாசமெனும் கயிறு அவிழ்க்கப்படும் பொழுது ஆத்மா சுதந்திரமடைகிறது.

நல்ல பண்புகளைக்கொண்ட கிரியாதீட்சை பெற்ற மனிதர்கள் இறைவனின் கருணையினாலும் அருளினாலும் கிரியா யோகப் பயிற்சியில் தீவிரமடைவர். அவர் தம் வாழ்க்கையை பூமிக்குத் தாம் வந்திருக்கும் நோக்கத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு தமக்குள் கட்டுண்டுகிடக்கும் ஆத்மாவை கரையேற்றுவதற்குத் தேவையான புலனடக்கம், மன அடக்கம் போன்ற அஷ்டாங்கயோகத்தில் கூறப்பட்டுள்ள வற்றை நன்கு கடைபிடித்தும் பலனை எதிர்பாராமல் செயல்களை அனைத்து கர்மங்களும் இறைவனுக்காகச் செய்தும் வாழ்நாளை கழிப்பவர்கள் கிரியா யோகத்தினால் இறைவனை அடைவர். தீய கர்மம் செய்யக்கூடாது. அதே சமயம் நல்ல கர்மத்தை பற்றற்ற நிலையில், இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணித்தும் எப்பொழுதும் இறை போதையிலிருந்துகொண்டும், அனைத்தையும் இறைவனுக்காகச் செய்து வாழ்கின்றவர்கள் திரும்ப பூமிக்கு வரவேண்டிய அவசியமில்லை. பற்றுடனும் பலனை எதிர்பார்த்தும் செய்கின்ற கர்மங்களின் (நல்ல கர்மாவானாலும் சரி, தீய கர்மாவானாலும் சரி) பலனை அனுபவிப்பதற்காக மனிதன் பூமியில் பிறக்கத்தான் வேண்டும். முதலில் நல்ல குணங்களை வளர்க்க வேண்டும். பின்னர் யோகத்தைப் பயில வேண்டும். அது நல்ல பலனைத் தரும். அதனால் நம் அன்பிற்குரிய மகாசக்தியான இறைவனை கண்டறிவதுடன் அவனுடைய குழந்தைகளான மகான்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதையும் அறியமுடியும். பகவத்கீதையில் அதற்கான ஒரு கருத்து கூறப்பட்டுள்ளது, என்னவெனில் “எந்த இடத்தில் யோகேஸ்வர கிருஷ்ணனும் (இறைவன்), எங்கே காண்டீவதனுர்தாரியான அர்ஜூனனும்

இறைவனிடத்தில் சரணாகதி அடைந்த அர்ஜூனனைப்போன்ற பக்தர்கள் ஒன்றாக இருக்கிறார்களோ அங்கே வெற்றி, ஐஸ்வரியம், திடமான நீதிநெறி இவைகள் இடம் பெறும். அவர்கள் இருவரும் (இறைவனும் மனிதனும்) பிரிந்திருக்கும் இறைவனை மறந்திருக்கும் மனித ஆத்மா இடத்தில் நன்மை ஏற்பட வழிவகையில்லை என்பதுதான் இதன் பொருள்.” உண்மையிலேயே யார் ஒருவர் இறைவனிடத்தில் சரணடைகிறாரோ அவர் இறைவனின் சகல ஐஸ்வரியங்களுக்கும் அதிபதியாவார். அவ்விடம் இறைவனின் அருள் நிறைந்திருக்கும். அந்த ஆத்மா இறைவனின் சாம்ராஜ்யத்தில் இறைவனுடன் ஆனந்தமாக இருக்கும். இதுவே கிரியா யோகத்தின் மகிமையே! குற்றம் புரிந்தவன் பெரிய குற்றமானாலும் அந்தக் குற்றங்களையும், தவறிழைத்தவன் எத்தகைய தவ|றுகளானாலும் அத்தவறுகளையும் எப்பொழுது உணர்கிறானோ அப்பொழுதே அவன் மன்னிக்கப்படுகிறான். பின்னர் இந்த உன்னதமான கிரியா யோக நெருப்பில் அனைத்து கர்மவினைகளையும் எரித்துவிடுகிறான்! அவன் சுதந்திரமடைகிறான்! இறைவனை அடைகிறான்!!!

மீண்டும் மலரும்....

குருப்ரியா Cell No. 9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி, குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070


# பத்து உபதேசங்கள்

## (தசோபதேசம்)

காஞ்சி காமகோடி பீடத்தின் மஹா ஸ்வாமிகள் ஜகத்குருஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் “தசோபதேசம்” பத்து உபதேசங்கள்.

1. மனிதனாக பிறந்த ஒவ்வொருவரின் கடமையும் நமக்கு அடுத்தவர்கட்கு உதவியும் நன்மையும் செய்யக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதே. நாட்டிற்கு ஏழை மக்கள் தங்களுடைய உண்மையான விசுவாசமான உழைப்பால் தொண்டு செய்யமுடியும். வசதி படைத்த பணக்காரர்கள் தங்களின் செல்வத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு உதவ முடியும். செல்வாக்கு படைத்தவர்கள் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி வசதி குறைந்தவர்களாய் இருப்போரின் வசதியினை மேம்படுத்த முடியும். இங்ஙனம் நமது உள்ளத்தில் தொண்டு மனப்பான்மையினை எப்போதும் நிலைத்துள்ளதாகச் செய்ய முடியும்.
2. மனிதன் ஒரு புல்லின் நுனியையும் தானாக உற்பத்தி செய்ய முடியாது. நாம் உண்ணும் உணவையோ அல்லது உடுக்கும் ஆடையையோ இறைவனுக்கு முதலில் அளிக்காமல் நாம் பயன்படுத்திக் கொண்டால் செய்நன்றி மறந்த குற்றத்திற்கு கட்டாயம் ஆளாவோம். சிறந்ததும் உயர்ந்ததும் எதுவோ அதனையே தான் இறைவனுக்கு நாம் அளிக்க வேண்டும்.
3. அன்பு இல்லாத வாழ்க்கை வீண். மனித சமுதாயம், பறவைகள், விலங்குகள் என இப்படி எல்லா ஜீவராசி களிடமும் பிரேமையையும் அன்பையும் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
4. தர்ம சிந்தனையற்றவர்களால் சேர்க்கப்பட்ட செல் வம் அவர்களின் சந்ததியர்களால் பொதுவாக அழிக்கப்படுகிறது. ஆனால் வள்ளல் தன்மை கொண்டவர்களின் குடும்பங்களோ எப்போதும் மகிழ்ச்சியில் திளைத்து இறை அருளின் பாத்திரமாகவே இருந்து வருகின்றன.
5. மிகுந்த சிறந்த செயலாற்றிய ஒருவர் அந்த செயலால் ஏற்பட்ட பலனின் பெருமையினை, மற்றவர்களின் புகழ் உரைகளுக்கு செவி சாய்த்தாலோ அல்லது தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொண்டாலோ, இழந்து விடுகிறார்.
6. நிகழ்ந்த ஒன்றினை குறித்து வருத் தப்படுவது நல்லதல்ல. நன்மை எது, தீமை எது என்று நாம் பகுத்துப் பார்க்க அறிந்திருந்தால் அந்த அறிவு நம்மை மீண்டும் தீயவற்றின் குழியில் வீழ்வதினின்றும் காப்பாற்றும்.
7. நம்முடைய வாழ்வு காலத்தை நல்ல செயல்கட்காக உபயோகப்படுத்த வேண்டும். அடுத்தவர்களின் நலனுக் காக உள்ள செயல்களில் நாம் ஈடுபட்டு நம்முடைய பங்கினை செலுத்த வேண்டும். நம்முடைய சுயநல தேவைக் காக அல்லது ஆசைகளை பூர்த்திசெய்து கொள்வதைக் காட்டிலும் இது பன் மடங்கு மேலானது.
8. நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு என விதிக்கப்பட்ட கடமைகளை நாம் தவறாமல் கடைபிடிப்பதோடு இறை அன்பு நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.
9. தன்னுடைய கடமையை சரிவர செய்து வருபவர் தன்னுடைய லக்ஷ்யத்தை அடைவார்.
10. நம்முடைய துயர்களுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளே ஒரே தீர்வு ஞானம் ஒன்றுதான்.



ஆன்மிகமலர் மெயில் புக்


விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

## வாசியோகமே

# சிவயோகம்



நாம் இடது நாசியில் 16 அங்குலமும், வலது நாசியில் 12 அங்குலம், சுழுமுனையில் 8 அங்குலம் என்று சராசரியாக நிமிடத்திற்கு 15 சுவாசங்கள் வீதம் ஒரு நாள் ஒன்றுக்கு 21600 சுவாசங்களை நடத்துகிறோம் (இது சித்தர்கள் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் சுவாசக் கணக்கு). சராசரியாக 12 அங்குலம் சுவாசம் வெளியே விடுவதில் 4 அங்குலம் குறைந்து 7200 சுவாசம் நஷ்டமாகி 14400 சுவாசமே உள்ளடங்குகிறது என்கிறார்கள். இந்த நஷ்டக் கணக்கை சரி செய்யக் கண்டுபிடிக்கப்பட்ட வழியே பிராணாயாமம்.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்கு
கூற்றை உதைக்குங் குறி அதுவாமே !

96 தத்துவங்களுக்குள் அடங்கிவிடுகிறான் மனிதன். அவை, அறிவு 1, குணம் 3,வினை 2,மண்டலம் 3, மலம் 3, தோஷம் 3, ஏசனை 3, கரணம் 4, பூதங்கள் 5, பொறிகள் 5, தொழில் 5, கோசங்கள் 5, நிலை 5, அவஸ்த்தை 5, புலன்கள் 5, கன்மேந்திரியம் 5, ஆதாரம் 6, தூண்டல் 8, நாடிகள் 10, காற்று 10 என்பனவாம்.

இதில் 10 காற்றுகளை (வாயு) தசவாயுக்கள் என அழைப்பர். அவை 1 பிராணன், 2 அபானன், 3வியானன், 4 உதானன், 5 சமானன், 6 நாகன், 7 கூர்மன், 8 கிருகரன், 9தேவதத்தன், 10 தனஞ்செயன் என்பன வாகும். மனித உடல்கள எதனால் இயக்கப் படுகின்றன? காற்றால்தான. இதையே ஒரு சித்தர் ''காயமே இது பொய்யடா ! வெறும் காற்றடைத்த பையடா !'' என்று உறுதிப் படுத்துகிறார். மனித உடல் முழுவதும் காற்றானது நீக்கமற நிறைந்து இயங்கியும், இயக்கியும் வருகின்றது.மனித இயக்கத் திற்கு ஆதார சக்தி காற்றுதான் என்று அனைத்து சித்தர்களுமே ஒப்புக் கொள்கிறார்கள். மனதை இயக்குவதும் சுவாசிக்கும் காற்றுதான். சித்தத்தின் சலனத்திற்கு காரணம் காற்றுதான். காற்றைக் கவனித்து தியானிப்பதே வாசியோகம் எனப்படும். அதாவது வாசியை கவனித்து அதனோடு ஒன்றுதல். வாசி என்ற சொல்லைத் திருப்பினால் சிவா அல்லவா, எனவே வாசியோகமே சிவயோகமாகும்.

தியானம் செய்ய சுத்தமான காற்றிருந்தாலே போதும் வேறென்ன வேண்டும் என்பார்கள். மூச்சு இல்லையேல் பேச்சு இல்லை. அதிகாலையில் தியானம் செய்வதன் சூட்சுமம் என்னவென்றால், அதற்கும் காற்றுதான் காரணம். அதாகப்பட்டது, சாதாரணமாக காற்றில் ஆக்ஸிஜன் இருக்கிறது. ஆனால் அதிகாலையில் அதோடுகூட ஓசோனும் சேர்ந்து கிடைக்கிறது. அப்போது அது அமிர்தக்காற்று எனப்படுகிறது. அமிர்தம் உண்ட பலன் அதற்கு உண்டு. அதாவது நீடித்த ஆயுள் அல்லது மரண மில்லா பெருவாழ்வு கிடைக்க உதவியாக இருக்கும். இந்த அமிர்தக் காற்றே தேவர்கள் சுவாசிக்கும் காற்று என்று சொல்லப்படுகிறது. அமிர்தக் காற்றில் பஞ்சபூத சக்திகள் நிரம்பித் ததும்பி வழிகின்றன.

**“சித்தர்கள், மகான்கள், யோகிகள் தங்கள் உடலை மாயமாக்கி மறையும் சித்துக்கு அன்னமய கோஷம் பிராணமய கோஷத்தில் அடங்குவதுதான் காரணம்”**

சுவாசம்தான் மனிதனின் ஆயுளை நிர்ணயம் செய்கிறது என்பதைக் கண்டுபிடித்தவர்கள் சித்தர்களே. ஒரு நாயானது ஒருநாளைக்கு 72000 தடவை சுவாசித்து 14 வருடங்களில் மரித்து விடுகிறது. குதிரையானது ஒருநாள் ஒன்றுக்கு 50400 தடவைகள் சுவாசித்து 30 லிருந்து 35 வயதுகாலம் வாழ்ந்து மரிக்கிறது. யானை 28800 தடவைமட்டுமே சுவாசிப்பதால் 100 வருடங்கள் வாழ்ந்து விடுகிறது. ஆமை ஒருநாள் ஒன்றுக்கு 7200 தடவைகள் மட்டுமமே சுவாசிப்பதால் 400 வருடங்கள் உயிர் வாழ்கிறது. பாம்புகள் அதையும் மிஞ்சி 4320 தடவைகள் மட்டுமே சுவாசித்து சுமார் 500 முதல் ஆயிரம் வருடங்கள் கூட உயிர் வாழ்வதாக சொல்லப் படுகிறது.

மனிதனுக்கு விதிக்கப்பட்ட சுவாசமாக சித்தர்கள் குறிப்பிடும் எண்ணிக்கை 21600 ஆகும். அப்படி சுவாசிக்கும் மனிதன் 120 ஆண்டுகள் உயிர் வாழலாம் என்கின்றனர். அதே சுவாசத்தை உற்று கவனித்து இழுத்து நிதானமாக மூச்சுவிட பழகிக் கொண்டால் ஆயுளை அதிகரிக்கலாம் என்கின்றனர். உதாரணமாக 10800 தடவைகள் நிதானமாக நன்றாக மூச்சுவிட பழகிவிட்டான் என்றால் 240 ஆண்டுகள் உயிர் வாழலாம். 5400 தடவையே நாள் ஒன்றுக்கு சுவாசிப்பவன் 480 ஆண்டுகள் உயிர் வாழலாம் . இதையே திருமூலர் சித்தர்

''காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்கு
கூற்றை உதைக்குங் குறி அதுவாமே!'' என்று குறிப்பிடுகின்றார்.

நமது சரீரம் அல்லாது மேலும் நான்கு சூக்கும சரீரங்கள் நமக்கு உண்டு என்று சித்தர்கள் கூறுகிறார்கள். ஆக மொத்தம் ஐந்து. அன்னமய கோஷம் இது நம் தூல தேகமாகும். பிராணமய கோஷம் பிராணனும், கர்ம இந்திரியங்களும் கூடி நிற்பது. மனோமய கோஷம் மனமும், கர்ம இந்திரியங்களும் கூடி நிற்பது. விஞ்ஞானமய கோஷம் புத்தியும், ஞானேந்திரியங்களும் கூடி நிற்பது. ஆனந்த மய கோஷம் பிராணவாயுவும், சுழுத்தியும் கூடி நிற்பது.

பஞ்சபூத சக்தியாலும், அன்னத்தாலும் நரம்பு, தோல், இரத்தம், மாமிசம், நகம், ரோமம், சுக்கிலம்

www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் மெயில் புக்







www.aanmeegamalar.com

ஆகிய தாதுக்களால் ஆன தூல தேகமே அன்னமய கோஷம். அந்தக்கரணம், ஞானேந் திரியங்கள், பிராணாதிகள், கர்மேந்திரியங்கள் போன்றவற்றின் சேர்க்கையே சூக்கும சரீரங் களாகிய பிராணமய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞானமய கோஷம் என்ற மூன்றும். நம் தூல சரீரத்தின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற அறிவுக் கருவிகளான ஞானேந்திரியங்களையும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபதம் என்கிற கர்மேந்திரியங்களையும் இயக்குவது பிராணனே. நாம் தூங்கினாலும், விழித்திருந்தாலும் நம் இதயத்தை இயங்கச் செய்வதும், இரத்த ஓட்டத்தை தடையில்லாமல் நடைபெற வைப்பதும், நுரையீரலை இயக்கி மூச்சை முறைப்படி நடத்துவதும் பிராணனே. இப்படி உடலின் சகல உள்வெளி இயக்கங்களுக்குக் காரணமாக இருக்கும் பிராணனே பிராணமய கோஷம். அன்னமய கோஷத்தைக் கலந்து பரவி தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது பிராணமய கோஷம், அன்னமய கோஷத்தின் ஆத்மா பிராணமய கோஷம். இந்த அன்னமய கோஷத்தை விட்டு உணர்வை உள்நிலைப்படுத்துபவன் பரம்பொருளே. தான் இந்த உடம்பு இல்லை என்கிற மெய்யுணர்வு வளர்ச்சிக்கு நுட்பமாக உடம்பினுள்ளும் வேறாகி நிற்கும் பிராணமய கோஷம் காரணமாகிறது.

சித்தர்கள், மகான்கள், யோகிகள் தங்கள் உடலை மாயமாக்கி மறையும் சித்துக்கு அன்னமய கோஷம் பிராணமய கோஷத்தில் அடங்குவதுதான் காரணம்.

சித்துக்களைக் கடந்து, அதற்கு மயங்காதவர்கள் பிராணமய கோஷத்தையும் கடந்து உணர்வை உள்ளே செலுத்த மனோமய கோஷம் ஆட்கொள்கிறது. மனிதனுக்கு எது சரி, எது உணமை என்பதைத் தெளிவுபடுத்துவதே மனோமய கோஷம் தான். மனம் அழிந்து உணர்வு தலைதூக்குமிடம் விஞ்ஞானமய கோஷம். நம் பாதை சரிதானா ? என்ற கேள்வியோடு இலட்சியத்துக்கான முடிவு எடுக்கப்படுவது விஞ் ஞானமய கோஷத்தினால்தான். விஞ்ஞானமய கோஷத்தை எட்டுபவர்களுக்கே உள்ளும் புறமும் ஜோதியைக் காண வாய்ப்பு கிடைக்கும். நாம் எடுக்கும் முயற்சியின் வெற்றியின் மகிழ்ச்சியை உணரும் இடமே ஆனந்தமய கோஷம். யோகத்தின் எட்டு நிலைகளையும் கடந்தவர்களுக்கே ஆனந்தமய கோஷத்தை அனுபவிக்க முடியும். இந்திரியங்களைக் கட்டி மனத்தை வென்று நம் உடலில் உயிராய் கலந்து நிற்கும் இறைவனை உணர்ந்து, கலந்து, இன்புற்று இருக்கும் நிலையே ஆனந்தமய கோஷத்தில் உணரப்படுகிறது. இந்த கோஷங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது ஆன்மா. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மனம் உள்ளே ஒடுங்க ஒடுங்க உணர்வுகள் ஒடுங்குகின்றன. உணர்வுகளின் ஒடுக்கமே சமாதி நிலை. இவ்வளவும் பிராணனின் கைவல்லியத்தால்தான் விளைகிறது.










# மற்றவர்களும் பயன்பெற

# அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 9,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**whatsapp: 7299992699 / 9841807572**

**aanmeegamalar@gmail.com**

# மாயாஜாலம் செய்யும் மந்திரங்கள்!

சித்தர்களின் தலைவர் திருமூலர் சொல்கிறார் மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்று, அதாவது மனது செம்மையாக மந்திரம் ஜெபிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். மனதை செம்மைப்படுத்த ஒருநிலையாக்க மந்திரம் என்பது அவசியம்.

கண்களை மூடி கொண்டு நெற்றிபொட்டில் கவனம் செலுத்துங்கள் மனம் குவியும் என்கிறார் ஒருவர், அப்படி செய்வதை விட விளக்கு ஒன்றோ, வெளிச்சம் ஒன்றோ அந்த இடத்தில் பிரகாசிப்பதாக பாவனை செய்யுங்கள் மனம் வசமாகும் என்கிறார் வேறொருவர்.

மூக்கு நுனியை பார்க்க சொல்கிறார் ஒருவர், மூலாதாரத்தை கவனி என்கிறார் ஒருவர் இப்படி அவரவருக்கு பரிச்சயமான வழிவகைகளை கூறுகிறார்கள். இவைகள் எல்லாமே சரிதான், ஆனால் இவைகள் எல்லாவற்றையும் விட மந்திரம் ஜெபிப்பது ரொம்ப சரி



மனம் ஒருநிலைப்பட மந்திரம் வேண்டும், இறைவனை துதிப்பாட மந்திரம் வேண்டும், அவனை அர்ச்சனை செய்ய மந்திரம் வேண்டும், கல்யாணம் நடத்த, பெற்ற பிள்ளையை தொட்டிலில் போட, பாடம் துவங்க என்று துவங்கி மயானம் வரையில் மந்திரம் என்பது தேவைப்படுகிறது.

ஒவ்வொரு இந்தியனின் வாழ்விலும் இப்படி அத்தியாவசியமாகி போன மந்திரங்களை பற்றி சாதாரண மனிதர்களாகிய நாம் தெரிந்து வைத்திருப்பது என்ன? அதை பற்றி எந்தளவு நமக்கு தெரியும், முதலில் மந்திரம் என்றால் என்ன?

மந நாத் த்ராயதே இதி மந்த்ர

என்று வட மொழி ஸ்லோகம் ஒன்று உண்டு, அதாவது மனனம் செய்தால் காப்பாற்றுவது மந்திரம் என்பது இதன் பொருளாகும். மனப்பாடம் செய்தால் காப்பாற்றுவதற்கு மந்திரம் என்ன பரிசு சீட்டா என்ன? லட்ச லட்சமாக பரிசுகள் விழுந்து காப்பதற்கு என்று சிலருக்கு தோன்றும், இது அப்படி அல்ல துன்பங்கள், துயரங்கள், அல்லல்கள் நம்மிடம் வராமல் மந்திரம் நம்மை காக்கும் என்பது தான் கருத்தாகும்.

மந்திரத்திற்கு காக்கும் சக்தி உண்டா? எப்படி உண்டு? என்ற சந்தேகம் வருவது இயற்கை அதை போக்க வேண்டுமானால் சற்று நாம் கடினமான விஷயத்தை பற்றி சிந்திக்கும் ஆர்வத்தை நமக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போது தான் உண்மைகளை உண்மைகளாக உணர முடியும்.

நம்ம உடம்புக்குள்ளே உட்கார்ந்து இருக்கிறதே உயிர், அந்த உயிர் திடப்பொருளா? திரவ பொருளா? வாயு பொருளா? எதனால் ஆனது உயிர் மேலே சொன்ன எதுவாளையும் உயிர் ஆகவில்லை, எதுவாகவும் உயிர் இல்லை, உயிர் என்பது நாதம் அதாவது சத்தம் என்று சித்தர்கள் ஆராய்ந்து அனுபவித்து கூறுகிறார்கள்.

சத்தத்திற்கு பொருட்களை அதிர வைக்க கூடிய சக்தி உண்டு, இயங்க வைக்கும் ஆற்றலும் உண்டு, நமது உடம்பிற்குள் உயிர் என்ற நாதம் அதாவது சத்தம் மூலாதாரத்தில் உடலில் நடுப்பகுதியில் அமர்ந்து கொண்டு உடல் முழுவதும் அதிர்வலைகளாக துடிப்புகளாக பரவி இருக்கிறது. இதனால் தான் நமது உடம்பு சூடாக இருக்கிறது.




உடம்பில் இருக்கின்ற இந்த நாதம் உடம்போடு மட்டும் நின்று விடுவது இல்லை. பிரபஞ்சம் முழுவதும் பரவி இருக்கிறது. உயிர் சக்தியானது அண்டம் முழுவதும் பரவி இருப்பதனால் தான் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்று சித்தர் வாக்கியம் கூறுகிறது.

பிரபஞ்சம் முழுவதும் நாத அலை பரவி உள்ளது ஐம்பூதங்களும் நாத அலைகளாலேயே இயங்குகிறது. இந்த நாத அலைகளை பீஜ மந்திரங்கள் என்கிறோம். ஒவ்வொரு பூதத்திற்கும் தனித்தனியான பீஜங்கள் உண்டு.

**சமஸ்கிருதத்தில் நான் என்று கூறுவதை அஹம் என்று சொல்வார்கள் இதில் அ என்பது இறைவனையும் ஹ என்பது மாயையும் குறிப்பதாகும். மனிதனுக்குள் மறைந்திருக்கும் இறைத்தன்மையை மாயை மறைக்கிறது என்பதே நான் என்ற அல்லது அஹம் என்ற சொல்லின் பொருளாகும்**

உதாரணமாக ஹம் என்ற பீஜம் ஆகாயத்திற்கு சொந்தமானது, யம் என்ற பீஜம் காற்றுக்கு உரியது, ரம் என்பது நெருப்புக்கு சொந்தமானது, வம் என்பது நீருக்கு சொந்தமானது, லம் என்பது நிலத்திற்கு உரிய பீஜமாகும்.

பரிசோதனை செய்வதற்காக இந்த பீஜ மந்திரங்களில் ஏதாவது ஒன்றை சிறிது காலத்திற்கு ஜபம் செய்து பாருங்கள். உங்களது உடம்பில் அந்த பூதத்தின் சக்தி அதிகரிப்பதை நீங்கள் கண்கூடாக காணலாம். அப்போது தெரியும் உங்களுக்கு அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்ற வாசகத்தின் உண்மை பொருள்.

இந்த பீஜ எழுத்துகளுக்கு தெய்வத்தை ஈர்க்க கூடிய ஆற்றல் உள்ளதா? என்று நினைப்பவர்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும், தெய்வ சக்தி இறைவனின் அருள் என்பவைகள் மனித னை அடையவேண்டுமென்றால் இயற்கை பொருட்களையே ஊடகமாக பயன்படுத்த வேண்டும், அதற்கு இந்த மந்திர பீஜங்களே சரியான ஊடகங்களாகும்.

ஹ்ரீம் என்ற பீஜ மந்திரத்தில் உள்ள ஹ என்ற எழுத்தும், ர என்ற எழுத்தும், ஈ என்ற எழுத்தும், ம என்ற எழுத்தும் தனித்தனியாக உச்சரிக்கப்படும் போது ஆகாயத்திற்கான பீஜ மும் நெருப்பிற்கான பீஜ மும் வருகிறது. இந்த இரண்டு பீஜங்களையும் ஒருங்கிணைத்தால் அர்த்த நாதீஸ்வர தெய்வத்தின் நாத விந்து கிடைக்கிறது. அதாவது ஹ்ரீம் என்ற மூல மந்திரம் அர்த்தநாதீஸ்வரரை சூட்சகமாக அடையாளப்படுத்துவதால் அந்த தெய்வத்தின் அருளை சுலபமாக மனிதன் பெற்றுவிட முடிகிறது.

எப்படி ஒவ்வொரு இயற்கை பூதத்திற்கும் தனித்தனியான பீஜ மந்திரங்கள் உண்டோ? அதே போன்றே தெய்வங்களுக்கான பீஜ மந்திரங்களும் இருக்கிறது, ‘‘ஆச்சரியமான ஒரு விஷயம்‘‘ ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுகென்றே பீஜ மந்திர ங்கள் உண்டு, யாருக்கு என்ன மந்திரம் பொருந்தும் என்பதை வேதங்கள் குறிப்பிடும் மனசாஸ்திர அடிப்படையில் பிரித்து விடலாம்.

குறிப்பாக ஸ்ரீம் என்ற மூல மந்திரம் எனக்கு

சொந்தமானது என்று வைத்து கொள்வோம், இந்த மந்திரத்தை நான் மீண்டும் மீண்டும் சொல்ல சொல்ல எனக்குள் மறைந்து கிடக்கின்ற பிரபஞ்ச ஆற்றல், ஆகாசத்தில் பரவியுள்ள பிரபஞ்ச ஆற்றலோடு தொடர்பு கொண்டு இறை சக்திக்கு என்னை மிகவும் நெருங்கியவனாக மாற்றி விடுகிறது. இறை சக்தியானது என் அருகில் இருக்கும் போது எவையெல்லாம் என் வாழ்க்கைக்கு தேவையோ அவையெல்லாவற்றையும் நான் சுலபமாக பெற்று விட முடியும் அல்லவா?

இதன் அடிப்படையில் உருவானது தான் நம்மால் கொடுக்கப்பட்டு வரும் ‘அமிர்ததாரா மஹா மந்திரம்’ என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கான மந்திர பீஜங்களை கொடுத்துவிட்டால் அவன் பரிகாரத்திற்க்காக வேறு பொருளை தேடிப்போக வேண்டிய அவசியமில்லை, அவனவன் பிரச் னைக்கு தீர்வுகள் என்பது அவனிடமே இருக்கிறது. இதை தான் கண்ணபெருமான் கீதையில் ‘உனக்கு நீயே நண்பன் உனக்கு நீயே விரோதி’ என்று கூறினார்.

இறுதியாக ஒரே கேள்வி நிற்கிறது இந்த மந்திரங்களை சமஸ்கிருதத்தில் மட்டும் தான் சொல்ல முடியுமா? தமிழிலோ அல்லது வேறு மொழியிலே மந்திரங்கள் இல்லையா? அதை சொல்ல கூடாதா? என்பது தான் அந்த கேள்வி யாகும்.

கேள்வி வாஸ்தவமானது தான் ஆனால் பதில் தான் சற்று கடினமானது. காரணம் தமிழில் மந்திரங்கள் இருக்கிறது, அவற்றை நான் குறைத்து மதிப்பிடவில்லை, ஆனால் பிரபந்தத்தில் உள்ள பீஜ மந்திரங்கள் அனைத்தையும் சரியான உச்சரிப்போடு சொல்ல வேண்டுமென்றால் அதற்கான எழுத்துக்கள் நம்மிடம் குறைவு என்றே என் சிற்றறிவுக்கு தோன்றுகிறது.

உதாரணமாக வடமொழியில் ஒவ்வொரு எழுத்திற்கும் தனிதனி பொருளும் உண்டு, தத்துவமும் உண்டு, குரு என்ற ஒரு சொல்லில் கு என்றால் இருட்டு ரு என்றால் அழித்தல் என்பது பொருளாகும். அதாவது அறியாமையை அழிப்பவன் குருவாகிறான்.

அதே போல சமஸ்கிருதத்தில் நான் என்று கூறுவதை அஹம் என்று சொல்வார்கள் இதில் அ என்பது இறைவனையும் ஹ என்பது மாயையும் குறிப்பதாகும். மனிதனுக்குள் மறைந்திருக்கும் இறைத்தன்மையை மாயை மறைக்கிறது என்பதே நான் என்ற அல்லது அஹம் என்ற சொல்லின் பொருளாகும்.

இப்படி எத்தனையோ சூட்சமங்கள் வடமொழி யில் இருக்கிறது. இதை அறிந்து தான், சித்தர்கள் மூல மந்திரங்களை சொல்லுகின்ற போது அதை வடமொழியிலேயே சொன்னார்கள். அந்த சொற்களை தமிழில் மொழி பெயர்த்து சொல்வதாக இருந்தால் பொருள் கிடைக்கும், சொல்லுக்கான அழுத்தம் கிடைக் காது.

எனவே மந்திரம் என்பது நமது உடம்பிற்குள் மறைந்து கிடக்கும் இறைவனின் சக்தி, அதை தட்டி எழுப்பி பிரபஞ்ச சக்தியோடு சேர்ப்பது தான் மந்திர ஜெபம், அதனால் தான் மந்திரம் ஜெபித்தால் மட்டுமே மனம் செம்மையாகும், மனம் செம்மையானால் மட்டுமே இறைத்தன்மையை உணர முடியுமென்று திருமூலர் அனுபவித்து கூறியிருக்கிறார்.

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434








# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

## உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும்

## நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

## உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

## எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

TALKS with THALI

## மந்திரங்கள்

தினம் ஒரு மந்திரம் என்றாலும் நம் வாழ்நாள் முழுவதும் படித்துத் தெரிந்துக் கொள்ள வேண்டிய அளவு கொட்டி குவித்து வைக்கப்பட்டிருக்கிறது மந்திரங்கள்.

அதனை எடுத்துப் படிப்பது யார்?

ஒரு வெற்றுச் சொற்கள் தான். ஆனால் அதனை மந்திரம் என்று போற்றும்படியாக மாற்றித் தருவது மனித இனம் தான்.

மற்ற இனத்திற்கு தேவையற்ற தான இம்மந்திரம் மனித இனத்திற்கு மட்டும் தேவையாகிப் போனதற்க்கு காரணம் மனித இனத்தின் தேவைகள் தான்.

தனது தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ள தன்னாலேயே உருமாற்றம் செய்யப்படும் சொற்களுக்குத்தான் மந்திரம் என்று பெயர்.

எப்போதும் தன் தேவைகளை மனிதன் முன்று விதத்தில் பெற விரும்புகிறான்.

தன் உழைப்பால், பிறர் உழைப்பில், எவர் உழைப்புமின்றி என்று.

மூன்றாமவன் மந்திரம் சொல்ல விரும்பாமல், சொல்பவரையும் விரும்பாமல், அதனால் வரும் பலனை விரும்புபவன். இவன் வாத + பிரதிவாதி.

இரண்டாமவன் மந்திரம் சொல்பவரை விரும்பி (நம்பி) அவர் மூலமாய் தன் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வான். இவன் காரியவாதி.

முதலாமவன் சொற்களை தன் தேவைக்கேற்ப மாற்றியமைத்து தன் தேவைகளை தானே பெற்றுக் கொள்ளும் வல்லவன்.. இவன் சிந்தனாவாதி.

வாத பிரதிவாதியால் சொற்கள் வீதியில் கிடந்தது, காரியவாதியால் அது வீட்டின் அலமாரியில் ஏறியது, சிந்தனாவாதியால் அது உலகிற்கே பரிசளிக்கப்பட்டது.

மனிதனால் மாற்றம் பெற வேண்டும் சொற்கள். சொற்களால் ஏற்றம் பெற வேண்டும் மனிதன். இவ்விரண்டையும் செய்வதற்கே மந்திரம் என்றுப்பெயர்.

- Thali

## உண்மையான பக்தர்

இறைவன் மீது திடீரென்று ஆர்வம் கூடுகிறதா நீங்கள் தான் உண்மையான பக்தர்.

இறைவனை நீண்ட நாட்களாய் வழிபட்டு, வழிபட்டு சலிப்பாகி விட்டதா? நீங்களே உண்மை பக்தர்.

இறைவனை எப்படி வழிபடுவது என்று தெரியவில்லையா? சர்வ நிச்சயம் நீங்கள் பக்தரே, இறைவனது சகல திருவிளையாடல்களையும் அறிந்தவரா? பக்த சிரோன்மணி நீங்கள் தான்.

வேத, வேதாந்தங்களை முற்றும் உணர்ந்த கல்விமானா? நீங்கள் கரை கண்ட பக்தர்.

இறைவனை ஒரேயொரு வேண்டுதலுக்காக வழிபட செல்கிறீரா? தலை சிறந்த பக்தர் நீங்கள் தான். இறைவனை சேவை, பஜனை மூலம் விரும்புபவரா? நீங்கள் தான் ஒப்பற்ற பக்தர். உண்மையை சொல்லுங்கள் இதில் உண்மையான பக்தர் யார்? என்கிறீர்களா?

உண்மை தன்னை பக்தர் என அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பாது. பக்தராய் திரியலாம், வேஷமிடலாம், முயற்ச்சிக்கலாம். ஆனால் இயல்பான பக்தியானது உண்மையின் அருகில் உருகிக் கொண்டிருக்குமேயன்றி ஊரார் மத்தியில் உலா வராது.

பக்திக்கு சிலர் லட்சணம் சொல்வர். லட்சணம் என்பதும் மனிதனின் ஆராய்ந்து அறியப்பட்ட அறிக்கைதான். ஆனால் பக்தியானது ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்ப்பட்டது.

எடைப் போடும் மனங்கள் பக்தியை கண்டறிந்து கொள்ள முடியாது. பக்தியை கண்டறியும் கண்கள் எடைப் போடும் மனங்களுக்கு அறிவிக்காது. பக்தி எனும் மூன்றெழுத்து சொல் முக்காலத்தையும் உள்ளடக்கியது. எக்காலத்தையும் தெளிவாய் அறிய முடியாத ஜீவன்கள் பக்தர் என்றால் முக்காலத்தை உள்ளடக்கியவர்கள் யார்?

- Thali (9600999279)



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# பகவானைவிட பகவானின் நாமம் உயர்ந்தது



பகவானை விடப் பகவான் நாமத்திற்கு சிறப்பு அதிகம் என்று சொல்லுவார்கள். இதற்கு ஒரு கதைசொல்வதுண்டு.

காசியிலே ஒரு செல்வந்தர் இருந்தார். மிகச் சிறந்த வள்ளல். ஆனால் பூர்வ ஜன்மப் பலனாக அவரைத் தொழுநோய் பற்றிக்கொண்டது. வாரி வாரி வழங்கிய அந்தச் செல்வரை நன் றாகக் கவனித்துக்கொள்வதற்காக அவரிடம் உதவிகள் பெற்ற பலரும் முன்வந்தனர். அந்தச் செல்வந்தரின் நோய் முற்றிப்போய் புழுக்கள் நெளியத்தொடங்கின.

தாம் யாருக்கும் பாரமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. தனது நண்பர்களையும் ஆதரவாளார்களையும் அழைத்துத் தன்னைக் கங்கைக்கரைக்குக் கூட்டிச் செல்லச் சொன்னார். தான் கங்கையில் மூழ்கி இறந்துவிட போகவதாகவும் தன் மேல் உண்மையான அக்கறை இருந்தால் ஒரு கல்லை அவர் உடலில் கட்டும் படியும் வேண்டினார்.

அவர்மேலும் மேலும் வற்புறுத்தவே அவருடைய இடுப்பில் ஒரு கல் கட்டப்பட்டது.

அவரைச் சுற்றி நின்றவர்கள் அழுதுகொண்டிருந்தனர். அந்நேரம் அங்கே கபீர்தாசைன் சீடர் பத்மநாபர் என்னும் பெயருடையவர் வந்தார். அங்கே என்ன நடக்கிறது என்று விசாரித்தார். நடப்பதை அறிந்ததும் அங்கிருந்தவர்களிடம் ‘நான் சொல்கிறப்டி நீங்கள் செய்தால் அவரை காப்பாற்றிவிடலாம். செய்வீர்களா?’’என்று கேட்டார்.

“எங்கள் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கிறோம்” என்றனர் சிலர். “ஒரு உயிரைக் காப்பாற்றவேறு உயிர்கள் தேவையில்லை. நீங்கள் எல்லோரும் ஒரே மனத்துடன் நான் சொல்லுவதை மூன்றுமுறை திருப்பிச் சொல்லவேண்டும்” என்றார்.

‘சரி’ என்றார்கள் உடனே அவர் எல்லோரையும் எழுந்து நின்று கைகூப்பிக்கொண்டு மூன்று முறை ராம நாமத்தைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

‘ஏற்கனவே இராமர் கோவிலுக்குச் சென்று பிரார்த்திதோம். ஏதும் நடக்கவில்லை’ என்றார்கள்.

‘ராமனைத் தொழுது நடக்கவில்லையென்றால் இராம நாமத்தால் நடக்கும். முயன்று பாருங்களேன்’ என்றார்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் ஒரே சிந்தையோடு மூன்று முறை இராம நாமத்தைக் கூறினர்.

செல்வந்தர் இடுப்பில் கட்டிய கல் அறுந்துவிழுந்தது. அவரது நோய் நீங்கப்பெற்று புதுப்பொலிவுடன் விளங்கினார். எல்லோரும் பத்மநாபரைப்போற்றினர்.

எல்லாம் குருவருள் என்றார் அவர்.

எல்லோரையும் அழைத்துக்கொண்டு கபீர்தாஸரிடம் சென்றார். எல்லாவற்றையும் கேட்டகபீர்தாசர் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாகக் கோபம் கொண்டார்.

பத்மநாபரைப் பார்த்து. ‘நீ என்னிடம் கற்றுக்கொண்டது இவ்வளவு தானா? இராம நாமத்தை ஒருமுறை சொன்னாலே போதுமே! அவர் குணமாகியிருப்பாரே!. அதன் திறமையை அறியாமல்மூன்று முறை சொல்லச் செய்து இராமநாமத்தின் பெருமையை குறைவாக மதிப்பிட்டுவிட்டாயே’என்றார் கபீர்தாசர்.

‘நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும பாவமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே இம்மையே
‘ராம’ என்றிரண்டெழுத்தினால்’

நன்மைகள் பலவும், செல்வங்களும் வழங்கும் ராம நாமம், புண்ணியத்தை பெருக்கி பாவத்தை சிதைத்துவிடும் சக்தி படைத்தது ராம நாமம், மனித வாழ்வில் நோய்நொடி ஏற்படாவண்ணம் பாதுகாத்து மரண பயத்திலிருந்து மீட்க உதவுவது ராம நாமம்.

இத்தனை சிறப்பு வாய்ந்த ராம நாமத்தை நாமும் ஜெபித்து வாழ்வில் படும் துன்பங்களிலிருந்து விடுபடுவோமாக.

இன்னும் ஒரு படி மேலே சென்று வேண்டிய நற்பலனைப் பெற “ஸ்ரீராம ஜெயம்” எழுதினால் மனம் ஒருமைப்படுவதுடன், மனதார வேண்டிக் கொண்ட அனைத்தும் நிறைவேற்றி வைக்கும் வல்லமை ராம நாமத்திற்கு உண்டு. குழந்தைகளை “ஸ்ரீராம ஜெயம்” எழுத வைத்தால் அவர்களின் படிப்புத் திறன் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com



# இயற்கை எழில் கொஞ்சும் ஸ்ரீ அரபளீஸ்வரர்

தமிழகத்தில் ஒவ்வொரு திருத்தலத்திலும் ஒவ்வொரு பிரசித்தி பெற்ற வரலாறுகள் உண்டு. அந்தவகையில், நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை வட்டம் வளப்பூர் நாடு பெரியகோயிலூரில் உள்ள அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை ஸ்ரீ அரபளீஸ்வரர் திருக்கோயில் மிகச் சிறந்த வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட எழில் கொஞ்சும் திருத்தலமாக விளங்கிவருகிறது.

இத்தலத்தின் வடபுறத்தில் ஐந்து நதிகள் ஒன்றாக கலந்தோடி மிக அருமையாக வந்தவண்ணம் உள்ளது. ஐந்து நதிகள் ஒன்றாக வரும் காரணத்தால் இந்த ஆறுக்கு ஐந்தாதாறு என்றும், அது மருவி ஐயாறு என்றும், பஞ்ச நதி என்றும் பெயர் கொண்டதாக விளங்குகிறது.

இந்த ஆறு வருடம் முழுமைக்கும் வற்றாது ஓடும் ஒரு ஜீவ நதியாக இருக்கிறது இதற்கு மற்றும் ஒரு சிறப்பம்சம் கொல்லி மலை வனம் மூலிகைகள் நிறைந்த ஒரு வனம் இந்த மூலிகை கள் மீது இந்த நீர்கள் பட்டு இந்த அந்தாறு தண்ணீரும் மூலிகை தண்ணீராக வழிந்தோடி வருகிறது என்பது சிறப்பு.

அத்தோடு ஸ்ரீ அரபளீஸ்வரர் திருக்கோயில் அருகில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு "ஆகாசகங்கை நீர் வீழ்ச்சி" என்று ஒருபெயர் உண்டு. நெல்லை மாவட்டம் குற்றாலம் நீர்வீழ்ச்சியை விட கூடுதல் உயரம் கொண்டதாகவும், வெள்ளை பஞ்சுகளை அரைத்து கொட்டுவது போல வெள்ளை புகை மூட்டமாக பேரோசையுடன் 150அடி உயரத்தில் இருந்து நேராக வெள்ளியை உருக்கி ஊற்றுவது போன்று நேராக வந்து விழும் அந்த நீர்வீழ்ச்சியில் குளிக்கும்போது ஆகாசத்தில் இருந்து நீர் கொட்டுவது போன்று ஒரு உணர்வு இருக்கிறது என்பதால், அக்கால மக்கள் அதை ஆகாசகங்கை நீர் வீழ்ச்சி என்று அழைத்தனர்.

இங்கு நீராடிவிட்டு வந்து இந்த ஸ்ரீ அரபளீஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ அரபளீஸ்வரர் சுவாமியை வணங்குவது ஐதீகமாக இருக்கிறது காரணம் இந்த ஐந்தாதாறு தண்ணீர் புரண்டோடும் போது இந்த ஆற்றின் தண்ணீரில் வண்ண வண்ண மீன்கள் துள்ளி குதித்து திரியுமாம் அப்போது அவ்வாறு ஒரு மீனை பிடித்து ஒரு சித்தர் அந்த குறிப்பிட்ட மீனை இரண்டாக அருத்து சமையல் செய்ய முற்பட்டபோது அறுக்கப்பட்ட அந்த மீன் இரண்டானபிறக்கும் அந்த ஆற்றுநீரில் குதித்து மீண்டும் முழு மீனாக மாறி தண்ணீரில் ஓடியதாகவும் அப்போது அந்த சித்தர் இந்த அற்புதத்தை கண்டு ஏதோ ஒரு அதியம் இங்கு இருக்கிறது என்பதை உணர்ந்து, வனத்தில் அலைந்து திரிந்து ஸ்ரீ அரபளீஸ்வரர் திருக்கோயில் இருக்கும் இடத்தில் ஸ்ரீ அரபளீஸ்வரர் சுவாமியை சுயம்பாக கண்டுள்ளார்.

அப்போது அங்குள்ள சுயம்புக்கு நடுவில் அறுபட்ட அடையாளமாக ரத்தம் அதில் இருந்துள் ளது இவைகளை கண்டு அதிசயம் அடைந்த அந்த சித்தர் அறுத்து பலியிடப்பட்ட மீன்தான் ஈஸ்வரர் அவர் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதால் ஸ்ரீ அரபளீஸ்வரர் சுவாமி என்று அழைக்கப்பட்டார்.

இதனால் அங்குள்ள மீன்களை ஸ்ரீ அரபளீஸ் வரர் சுவாமி என்று இன்னும் போற்றி வணங்கும் பக்தர்கள் அங்குள்ள மீன்களை பிடித்து சமைப்பது கிடையாது, அத்தோடு சாதாரண காலங்களிலும் விழாக்காலங்களிலும் மீன்களை சிறப்பித்து, மீன்களுக்கு உணவு வகைகளை வழங்கி பூஜை செய்த பின்பு மீண்டும் ஆற்றில் விட்டுவிட்டு, அதன் பின்பு ஸ்ரீ அரபளீஸ்வரர் சுவாமி கோயிலில் சென்று பூஜை செய்து சுவாமியை வணங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

1300 ஆண்டுகளுக்கு முன்பு கி.பி.7 ஆம் நூற்றாண்டில் திருஞானசம்மந்தர், அருணகிரி நாதர் பாடல்களிலும் இந்த திருத்தலம் குறித்து அறியமுடிகிற இந்த பல்வேறு நிலைகளில் புனரமைத்து புனரமைத்து இறுதியில் கடையேழு வள்ளகளில் ஒருவரான வல்வில்ஓரி மன்னன் ஆட்சிக்காலத்தில் இந்த ஆலையம் எழுப்பட்டதாக அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை ஸ்ரீ அரபளீஸ்வரர் திருக்கோயில் திருத்தல வரலாறு கூறுகிறது

இங்கிருந்து செல்லும் ஐந்தாறு முசிறி வழியாக சென்று காவேரி ஆற்றில் கலக்கிறது இந்த ஆலயத்தில் இருந்து நோக்கினால் காவேரி ஆற்றின் தோற்றம் தெரியும் ஆடி மாதம் 18 நாள் பெருக்கு எடுத்து ஓடும் காவேரி ஆற்றின் வெள்ளபெருக்கைதான் ஆடி பெருக்குவிழா என்று அழைகின்றனர் அன்று தான் இந்த கோவிலின் முக்கிய திருவிழா, அப்போது ஆடி 17,18.19ஆகிய மூன்று நாட்கள் பிரசித்தி பெற்ற தேர் திருவிழா நடைபெறும்

இந்த விழாவில் காலம் காலமாக இந்த பகுதி பூர்வகுடி மக்களான மலை வாழ்மக்கள், பழங்குடி மக்களும் பண்பாடு கலாச்சாரம் குறையாமல் தங்களுக்கே உரிய பாராம்பரியம் குறையாமல் இந்த விழாக்களில் பங்கு கொண்டு வருகின்றனர். மேலும் மகா சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை தீபம், அன்னாபிஷேகம். திருவாதிரை, மற்றும் பிரதோஷம், மற்றும் இதர சிறப்பு பண்டிகைகள் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ அரபளீஸ்வரரை வணங்கினால், இறையருளுடன் சித்தர்களின் அருளாசியும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இயற்கையின் ரம்மியத்திற்கு நடுவில் இறைவன் காட்சிதருவதால் இத்திருக்கோவில் மன நிம்மதி யளிக்கும் திருக்கோவிலாக விளங்குகிறது.

– கீதாராணி, பண்ணைக்காடு.

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com




# நவக்கிரகங்களின் வரலாறு

## 1.சூரியன்

காசியப முனிவரின் குமாரர், ஒளிப்பிழம்பானவர், நவக்ரகங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றவர், சிம்மராசிக்கு அதிபதி. நவகிரகங்களில் நடுவில் அமர்ந்திருப்பவர்.

திக்கு ..................கிழக்கு
அதிதேவதை .......அக்னி
ப்ரத்யதிதேவதை ....ருத்திரன்
தலம் ....................சூரியனார் கோவில்
நிறம் ....................சிவப்பு
வாகனம் .............ஏழு குதிரைகள் பூட்டிய ரதம்
தானியம் .............கோதுமை
மலர் ....................செந்தாமரை , எருக்கு
வஸ்திரம் ............சிவப்பு
ரத்தினம் .............மாணிக்கம்
அன்னம் .............கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல்

## 2.சந்திரன்

பாற்கடலில் தோன்றியவர், தண்ணொளி உடையவர், வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர். கடக ராசிக்கு அதிபதி.

திக்கு ..................தென்கிழக்கு
அதிதேவதை .......ஜலம்
ப்ரத்யதிதேவதை ....கௌரி
தலம் ....................திருப்பதி
நிறம் ....................வெள்ளை
வாகனம் .............வெள்ளைக் குதிரை
தானியம் .............நெல்
மலர் ....................வெள்ளை அரளி
வஸ்திரம் ............வெள்ளாடை
ரத்தினம் .............முத்து
அன்னம் .............தயிர் சாதம்

## 3. செவ்வாய்

இவர் வீரபத்திரர் அம்சம், சுப்ரமணியரை தெய்வமாகக் கொண்ட இவர், பாவ பலனைக் கொடுக்கும் குரூரர். மேஷம், விருச்சிக ராசிகளுக்கு அதிபதி.

திக்கு தெற்கு
அதிதேவதை நிலமகள்
ப்ரத்யதி தேவதை க்ஷேத்திரபாலகர்
தலம் வைத்தீசுவரன் கோவில்
நிறம் சிவப்பு
வாகனம் ஆட்டுக்கிடா
தானியம் துவரை
மலர் செண்பகப்பூ, சிவப்பு அரளி
வஸ்திரம் சிவப்பு ஆடை
ரத்தினம் பவளம்
அன்னம் துவரம் பருப்பு பொடி சாதம்

## 4.புதன்

இவர் சந்திரனுடைய குமாரர். தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் இவருக்கு உண்டு. மிதுனம், கன்னி ராசிகளுக்கு அதிபதி

திக்கு ..................வட கிழக்கு
அதிதேவதை .......விஷ்ணு
ப்ரத்யதிதேவதை ....நாராயணன்
தலம் ....................மதுரை
நிறம் ....................வெளிர் பச்சை
வாகனம் .............குதிரை
தானியம் .............பச்சைப் பயறு
மலர் ....................வெண்காந்தள்
வஸ்திரம் ............வெண்ணிற ஆடை
ரத்தினம் .............மரகதம்
அன்னம் .............பாசிப்பருப்பு பொடி சாதம்

## 5.குரு

இவர் தேவ குரு என்னும் பட்டத்தை உடையவர். இவருடைய பார்வையால், தோஷங்கள் அனைத்தும் நீங்கும். பூரண சுபர். தனுசு, மீன ராசிகளுக்கு அதிபதி.

திக்கு ..................வடக்கு
அதிதேவதை .......பிரம்மா
ப்ரத்யதிதேவதை ....இந்திரன்
தலம் ....................திருச்செந்தூர்
நிறம் ....................மஞ்சள்
வாகனம் .............மீனம்
தானியம் .............கடலை
வஸ்திரம் ............மஞ்சள் நிற ஆடை
ரத்தினம் .............புஷ்பராகம்
அன்னம் .............கடலைப் பொடி சாதம் , சுண்டல்.

## 6.சுக்கிரன்

இவர் அசுர குரு. இவரை மழைக்கோள் என்றும் அழைப்பர். சுபர். ரிஷபம், துலாம் ராசிகளுக்கு அதிபதி.

திக்கு ..................கிழக்கு
அதிதேவதை .......இந்திராணி
ப்ரத்யதிதேவதை ....இந்திர மருத்துவன்
தலம் ....................ஸ்ரீரங்கம்
வாகனம் .............முதலை
தானியம் .............மொச்சை
மலர் ....................வெண் தாமரை
வஸ்திரம் ............வெள்ளாடை
ரத்தினம் .............வைரம்
அன்னம் .............மொச்சைப் பொடி சாதம்.

## 7.சனி

இவர் சூரியனுடைய குமாரர், பாவ பலன் தருவதில் ஈசுவர பட்டம் பெற்றவர். சனியைப் போல கெடுப்பாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை என்பது பழமொழியாகும். மகரம், கும்பம் ராசிகளுக்கு அதிபதி.

திக்கு ..................மேற்கு
அதிதேவதை .......யமன்
ப்ரத்யதிதேவதை ....பிரஜாபதி
தலம் ....................திருநள்ளாறு
நிறம் ....................கருமை
வாகனம் .............காகம்
தானியம் .............எள்
மலர் ....................கருங்குவளை, வன்னி
வஸ்திரம் ............கருப்பு நிற ஆடை
ரத்தினம் .............நீலம்
அன்னம் .............எள்ளுப்பொடி சாதம்

## 8.ராகு

இவர் அசுரத்தலையும், நாக உடலும் உடையவர். மிக்க வீரம் உடையவர். கருநாகம் என்று அழைக்கப் படுபவர்.

திக்கு ..................தென் மேற்கு
அதிதேவதை .......பசு
ப்ரத்யதிதேவதை ....பாம்பு
தலம் ....................காளத்தி
நிறம் ....................கருமை
வாகனம் .............நீல சிம்மம்
தானியம் .............உளுந்து
மலர் ....................மந்தாரை
வஸ்திரம் ............கருப்பு நிற ஆடை
ரத்தினம் .............கோமேதகம்
அன்னம் .............உளுத்தம்பருப்புப்பொடி சாதம்

## 9.கேது

இவர் நாகத்தலையும் அசுர உடலும் உடையவர். சிகி என்றும், செந்நாகம் என்றும் அழைக்கப்படுபவர்.

திக்கு ..................வட மேற்கு
அதிதேவதை .......சித்திரகுப்தன்
ப்ரத்யதிதேவதை ....பிரமன்
தலம் ....................காளத்தி
நிறம் ....................செம்மை
வாகனம் .............கழுகு
தானியம் .............கொள்ளு
மலர் ....................செவ்வல்லி
வஸ்திரம் ............பல நிற ஆடை
ரத்தினம் .............வைடூரியம்
அன்னம் .............கொள்ளுப்பொடி சாதம்

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# மனதை உள்ளிழுத்துக் கொள்வதால் எங்கு வேண்டுமானாலும் எந்தச் சூழ்நிலையிலும் இருக்கலாம்

- நீ உன் சுவாசத்தை ஒரு முனைப்பாக கவனித்தால், அது தானாகவே கும்பத்தில் {நிறுத்தல்} உன்னை கொண்டு சேர்த்து விடும்.இது பிராணாயாமம்.
- நீ எவ்வளவுக்கெவ்வளவு அடங்கி பணிவாக இருக்கிறாயோ அத்தனைக்கத்தனை எல்லாவிதத்திலும் உனக்கு நல்லது.
- மனதை உள்ளிழுத்துக் கொள்வதால் எங்கு வேண்டுமானாலும் எந்தச் சூழ்னிலையிலும் இருக்கலாம்
- உலகை கனவாக மட்டுமே கருத வேண்டும்
- மனதை நீ வெளி விஷயங்களிலும் ,எண்ணங்களாலும் திசைதிருப்ப விடக்கூடாது.
- வாழ்வில் உனக்கு கடமையாக அமைந்த வேலைகளை நிறைவேற்றும் வேளை தவிர மீதமான நேரமெல்லாம் ஆன்ம நிஷ்டையில் செலவிட வேண்டும். ஒரு கணமும் கவனக் குறைவிலோ, சோம்பலிலோ வீணாக்காதே.
- யாருக்கும் இம்மியும் தடையோ, தொந்தரவோ விளைவிக்காதே. தவிர உன் வேலைகளை எல்லாம் நீயே செய்துகொள்.
- விருப்பும், வெறுப்பும் இரண்டும் தவிர்க்கத்தக்கவை.
- எண்ணங்களனைத்தையும் குவித்து ஒரு முகப்படுத்தி தன்னுள் செலுத்தி தயங்காமல்: “நான் யார்” விசாரணை செய்ய வேண்டும் ஒருமுனைப்பாக இதைச் செய்தால் சுவாசம் தானே அடங்கும் இந்த மாதிரி கட்டுப்பாடாக சாதனை செய்யும் சமயம், மனம் திடீரென்று கிளம்பும். அதனால் கவனமுடன் விசாரத்தை தொடர வேண்டும்.

“நான் யார்” என்று எண்ணங்களின்றி இருத்தல் நிஷ்டை

“நான் யார்” என்று எண்ணங்களின்றி இருத்தல் ஞானம்

“நான் யார்” என்று எண்ணங்களின்றி இருத்தல் மோட்சம்

“நான் யார்” என்று எண்ணங் களின்றி இருத்தல் சகஜம்

அதனால் எண்ணங்க ளின் நிழல் கூட இல்லாமல் இருத்தலே பரிபூரண நிலையாகும் இதுநிஜம்.

– ரமணர்



www.aanmeegamalar.com